கீழ்பாற்கெல்லை தாழம்பள்ளத்துக்கு மேற்கு, தென்பாற்கெல்லை தழுவக்[கொழு](குழை)ந்த நல்லூருக்கு வடக்கு மேம்பாற்கெல்லை மடையத்தூர் அச்சரபாக்கத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை கொண்டம்பாக்கத்துக்குத் தெற்கும் இந்நாயனர் திருநாமத்துக் காணிகொண்டாளநாயகவிள . . . . . . ஸ்ரீபூதெரி ஆண்டார் பெருமாள் ஸ்தானமான்னிய நீங்கலாக நத்தம் நஞ்சை நிலம் புஞ்சை நிலம் கொல்லை [பி](பு)றவடை ஏரியும்

End :

ஏரி நீரோடுகாலும் மரமும் கிணறும் மன்றும் கன்று மேழும் உள்பட தர்மசாதனம் பண்ணிக்கொடுத்து இவ்வூரில் கடமை பொன்வரி, வாசல்வரி, மாவடை, மரவடை, எரிமீன் விலை, திருவாசலில் பிறக்கும் பழவரி புதுவரி சகலத்தவரிக்கும் திருக்கழுக்கு[ண](ன்ற)முடைய நாயனருக்கு பொக்காராயனதிக்கும் திருப்பணிக்கும் சருவமான்னியம் இறையிலியாகச் சந்திராதித்தவரைக்கும் செல்லும்படிக்குச் சிலாலேகை பண்(ணி)க்[கு](கொ)டுத்தேன்.

(கு பு.)—

இது திருக்கழுக்குன்றம் வேதகிரீசுரர்கோவில் மடைப்பள்ளி வாசற்படிக்கு மேலண்டைச்சுவரில் உள்ள ஒரு சாசனத்தின் பிரதி. வேதகிரீசுவரர்க்கு, பொக்காராயன் சுந்தரராயர் ஆமூர்(க்)கோட்டத்து ஆமிரவேலி பக்கத்தில் செனநாத நல்லூரான சிறுதையூரைத் தானம் செய்த விவரத்தை விளக்குகின்றது. இது வெட்டப்பட்ட காலம் சகாப்தம் 1328-க்கு மேல் செல்லாநின்ற விய ௵ ஐப்பசிமீ பூருவபட்சப் பிரதமையும் அசுவதி நட்சத்திரமுங் கூடிய புதவாரம்.

(c) திருக்கழுக்குன்ற சாசனம்.

TIRUKKALUKKUNRAŚĀSANAM

Foll. 3*b* - 4*a*.

A copy of the inscription relating to the grant of a portion of the village of Śirudaiyūr for the performance of certain services on the occasion of the festival of Mahāpūsam to Tirumalai Āludaiyanāyanār,

a form of Śiva worshiped in Tirukkaḷukkunṟam. The inscription is dated Wednesday the fullmoon day of the month of Puraṭṭāśi in the year Vyaya, Śaka 1328 expired.

Beginning :

. . . . . . வாசப்படிக்கு . . . .

ஸ்ரீமன் மகாமண்டலேசுவர பிரதாப பொக்கராயருக்குச் செல்லா[யி]நின்ற சகாப்தம் ஹூ 1328-க்கு மேல் விய ஹூத்தில் கன்னிநாயிற்றுப் பூர்வ பட்சத்து பவுர்ணமி புதவாரமும் பெற்ற அ(சுவதி) நாள் [ெ]சயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்(க்) கோட்டத்து ஆயிரவேலிப் பக்கத்தில் நாட்டவரோம் உடையார் திருமலை(யாளு)டைய நாயனார்க்குத் தர்ம சாசனம் பண்ணிக்கொடுத்தபடி :—

எங்கள் பற்று சென நாத நல்லூரான சிறுதையூர் நாற்பாற் கெல்லையும் தானமானியம் நீங்கலாக மகா பூசத்தினத் திருப்பணிக்கும் நாட்டு திறையிலியாக்கும் நீங்கா தேவதானமாக இந்த ஊரில் இரா . . . ாதாததுக்கு இருக்கும் பொன் 60 வினிவகமும் எங்கள் நாட்டிலே இறை ஒற்றிக்கொண்டு சந்திராதித்தவரைக்கு மிறுத்துக்(கொ)[கு]டுக்கும் . . . . கொடுத்தோம்.

உடையார் திருமலையாளுடைய நாயனுருக்கு ஆயிரம் வேலிப்பற்று நாட்டவரோம்.

இப்படிக்கு

இ[வை](து)வீசமூர் கிழவன் எழுத்து.
,, (ஸ)க[ய்]யூர் கிழவன் எழுத்து.
,, மாப்பூதிமாலை ஆழ்வான் எழுத்து.
,, பொன்னம்பல(க்)கூத்தன் எழுத்து.
,, திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து.
,, நாட்டுக் கணக்குத் தொண்டை மண்டலவேளான்.

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் திருமலை ஆளுடைய நாயனர் மகாபூசதினத் திருப்பணிக்கு ஆயிரம் வேலிப்பற்று நாட்டவர் சிறுதையூரில் தானசாசனஞ் செய்து மிகுந்திருந்த பாகத்தைக் கொடுத்த விவரத்தைத் தெரிவிப்பது. இச்சாசனத்தின் காலம் சகாப்தம் 1328-க்குச் செல்லாநின்ற விய ஹூ புரட்டாசிமீ பூர்வபட்சம் பௌர்ணமி - திதியும் அசுவதி நட்சத்திரமுங் கூடிய புதவாரம்.

(d) திரிபுரசுந்தரிகோயில்சாசனம்.

TRIPURASUNDARIKŌYILŚĀSANAM.

Foll. 4*a*-5*a*.

A copy of the inscription in stone in the temple of Goddess Tripurasundarī in Tirukkaḷukkunṟam relating to the grant of a lamp, cows, etc.,

to the temple of Ponniṭṭīśvaramuḍaiya Nāyanar in the said place by Adiyamāndēvar. It is dated Sunday the 9th day of the dark fortnight when the moon was in the constellation Rēvati of the month of Mithuna in the reign of Sundarapāṇḍiyadēvar.

Beginning:

ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்(மை)ம[ன்] அவர்கள் கோயில் . . . . சிலாசாசனத்துக்கு நக்கல்.

ஸ்ரீகோச்சடை பன்மரான எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ௮ மிதுனநாயிற்று அமரபட்சத்து நவமியும் நாயிற்றுக்கிழமையும் பெற்ற ரேவதி நாளும் கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர் கோட்டத்துத் திருக்கழுக்குன்றத்து உடையார் பொன்னிட்டீசு(வ)ரமுடைய நாயனார் கோயிற்றானத்தார்க்கு உடையார் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயிலில் திருநந்தாவிளக்கு(க் குட்டி) மன்றாடியடைப்புத் திருக்கழுக்குன்றம் கோனும், அரசுபுரந்த . . கோனும் சித்திரமேழிக்கோனும் பெரியநாட்டுக்கோனும் இந்த நால்வரோம் மெய்ப்பூட்டு தீட்டுக்கொடுத்த பரிசாவது :—

End:

உடையார் பொன்னிட்டீசுரர் கோயிலுக்குப் பாண்டியமண்டலத்து படக்குளக்கிடி மதுரையலகாமன் அரசரான [பு](அ)தியமான தேவர் சந்திராதித்த வரையும் செல்வதற்குத் திருநந்தா விளக்கு ஒன்றுக்கு வட்ட சலாமும் வானீற்பசு முப்பதும் ரிஷபம் ஒன்றும் கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு நாழிச் சேரால் அளகவெ . . . . நெய் [ஓ](உ)ழக்கால் (மை)வத்த நெய் சந்திராதித்தவரையும் நாங்கள், பரம்பர புத்திரரும் அளக்கக்கடவோமானோம்.

(கு.பு.)—

இது திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரி கோவிலிலுள்ள ஒரு சாசனத்தின் நகல். பொன்னிட்டீசுவரமுடைய நாயனாருக்கு நந்தா நெய் விளக்கும், பசு முப்பதும் பாண்டியமண்டலத்து மடக்குளக்கீழ் மதுரை யலகாமன் அரசரான அதியமான்தேவர் கொடுத்த விவரத்தைக் கூறுகின்றது. இதன் காலம், சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு . . . ௮ மிதுனநாயிற்று அமரபக்ஷத்து நவமியும் நாயிற்றுக்கிழமையும் பெற்ற ரேவதி நாள்.

(e) பக்தவற்சலேசுவரர்கோயில் சாசனம்.

BAKTAVARCALĒŚUVARARKŌYIL ŚĀSANAM.

Foll. 5a—6a.

A copy of the inscription on stone in the wall to the south of the entrance door in the temple of Bhaktavatsalēśvarar in Tirukkalukkunram relating to a sale-deed executed by two persons to one Anjūr Sundarayya. Date of inscription—Friday the 12th of the dark fortnight in the month of Cittirai of the year Vibhava in the reign of Karuppana Udaiyān.

Beginning :

பக்[த]தவர்த்தவீசுர சுவாமியா வாச(ற்)படி தெற்கு சுவரில் இருந்த சிலாசாசனத்துக்கு நகல்.

சொஸ்த ஸ்ரீமன் மகா மண்டலேசுர மூவராய கண்டன் ஸ்ரீவீர அரியண உடையார்[க்]குமார(ர்)[வ](க)ருப்பண உ(டை)டையார்க்குச் செல்லாநின்ற விபவஷூ த்து மேஷ நாயிற்று அமரபட்சத்து துவாதசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற அனுடத்து (நாள்) செயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு அஞ்சூரில் சடையப்பரையா பேரனுர் உண்டான சுந்தரய்யா மகனுக தொண்டர்க்குந் தாயற்ரூ யிம்மண்டலத்து ஆமூர் கோட்டத்துக் குமிழி நாட்டுத் தையூரான தெசநல்லூர் கிழவன் ஆதித்த தவர் முருகாழ்வாரை . . . . பரிசாவது:—

End :

தையூர் கால்வா, கூ-ம் கடலூரில் என் காணியான நா-ஙூ-வேலியும் இதில் மேல்வரும் கொல்லை [பி](பு)றவடை பொது அஞ்சு அளம் மனையும் மரமும், [குன](கிண)றும், வெள்ளான் பிள்ளைகளில் மாணிக்க[ந்](ன்) பெரிய காய(ன்)ந்திவடையான் இம்மூவரும் பறைய[டு](டி)மைக்காறப் பெருமாள் உள்ளிட்டார் என் காணியான எல்லை முற்றும் விலை நிச்சயித்த பணம் கூடுநாகூம, இப்பணம் ஆயிரத்[து அன்னூத்து அற](தைந்நூற்றறு)பதும் இது விலையாவதாகவும்; இதற்கு எப்பேர்ப்பட்ட கலனும் உத்தரவாதம் பண்ணுகிறேன். என்று எழுதியிருக்கப்பட்ட சா[தக](சன)ம்.

இப்படி,
ஆதித்ததேவன் எழுத்து.
முருகாழ்வார் எழுத்து.

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றம் பக்தவற்சலேசுவரர் கோவில்வாசற்படிக்குத் தெற்குச்சுவரில்உள்ள சாசனம் ஒன்றின் நகல். அஞ்சூர் சுந்தரையா என்பவருக்குத் தையூராதித்த தேவர் முருகாழ்வார் என்பவர்கள் எழுதிக்கொடுத்த நில முதலியவற்றின் கிரயசாசனத்தை தெரிவிக்கிறது.

இந்த நிலமுதலியனவற்றின் கிரயமாக, தையூராதித்த தேவர் என்பவர் அஞ்சூர் சுந்தரையாவினிடம் பெற்றுக்கொண்ட பணம் 1560. இஃதெழுந்த காலம் கருப்பண உடையார்க்குச் சொல்லாநின்ற விபவஷூ சித்திரைமீ அமரபக்ஷத்துத் துவாதசியும், அனுஷ நட்சத்திரமுங்கூடிய வெள்ளிக்கிழமை.

(*f*) பக்தவற்சலசுவாமிகோயில்சாசனம்.

BHAKTAVAṞCALASVĀMIKOYILŚĀSANAM.

Foll. 6*a*—7*a*.

A copy of the inscription found in stone on a wall to the south of the deity at the gate of the temple of Bhaktavatsalasvāmi in Tirukkaḻukkunṟam. It relates to an agreement made between certain weavers of Tiṟukkaḻukkunṟam. It is dated the 1st of Puraṭṭāsi of the Ānanda year in the time of Vīragoppaṇa Uḍaiyār.

Beginning:

பக்தவச்சலசுவாமியார் வாச[ப்](ற்)படிக்கு(த்) துவாரபாலகருக்கு(த்) தெற்கு[செவி](ச்சுவ)ரிலே இருந்த சிலாசாசனப்பிரதி.

சொஸ்தஸ்ரீ வீரகொப்பண உடையார்க்குச் செல்லாநின்ற ஆனந்தவருஷத்துப் புரட்டாசி மீ முதல் தேதி திருக்கழுக்குன்றம் நான்கெல்லைக்குட்பட்ட கைக்கோளர் பொற்பட்டாடை நூலாயும் ஆட்ட . . . ச . . . ம் மாதம்பொசசம் மாதவட்ட அதிகமாதம் (?) மற்றும் எப்பேர்ப்பட்ட பலவுபாதியும் உட்படவும் இவ்வூர்கைக்கோளர் பட்டணத்துக்குக் கொண்டுபோம் [பி](பு)டவைக்கும் இவர்கள் பட்டணத்திலிருந்து கொண்டுவரும் பலசரக்குக்கும், பலபற்றில்கொண்ட நெல்லுக்கும் (. . . . .) கூட்டுக் குத்தகையாக நிச்சயித்த பணம்-எம.

End:

இந்தப்பணம் எழுபதும் ஒழிய வேறொன்று சொல்லக்கடவனல்லதாகவும்; இம்மரியாதி சந்திராதித்தவரையும் நீர் பற்றிக்கொள்ளவும்; இத்தற்மத்துக்கு அழிவுசொன்னவன் [ெ]கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்றவன் பாவங்கொள்வன்.

அருளிச்செய்தபடிக்கு,

இ[வை](து)நாகுழகன் எழுத்து.

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றத்து பக்தவற்சலசுவாமி கோவில்வாசற்படி துவாரபாலகருக்குத் தெற்குச்சுவரிலுள்ள சாசனம் ஒன்றின்பிரதி. ஷை ஊரில் கைக்கோளர்கள் புடவை, பலசரக்குமுதலிய தம் வியாபாரநிமித்தம் செய்துகொண்ட கூட்டுக்குத்தகையின் விவரத்தைத் தெரிவிக்கிறது. இதன்காலம் ஸ்ரீ வீரகொப்பண உடையார்க்குச் செல்லாநின்ற ஆனந்த(வரு) புரட்டாசிமீ கவ.

(*g*) திருக்கழுக்குன்றம் கோயிலுக்குக் கிரயசாசனக்கிராம நாமாவலி.

TIRUKKAḺUKKUNṞAM KOYILUKKUK KIRAYAŚĀSANAKKIRĀMA NĀMĀVALI.

Foll. 7*a*—7*b*.

Purports to give a list of the villages given by different persons to the temple of Tirukkaḻukkunṟam.

Beginning:

ஜெதயூர்.	மூருகாழ்வார்.	கடலூர்.
தேசநல்லூர்கிழவன்.	தையூர்.	ஆகக்கிராமம்
ஆதித்ததேவர்.	காவலவாக்கம்.	மூன்றிலும்

அவன் காணியான ருஉ-வேலியும் கடுள்டுபணத்துக்கு விபவ-ஷூத்தில் குறையும் பணமும்கொடுத்து . . . . நாளையில் . . . . பா-கூ-ம், தாழம்பா-கூ. ஆகக்குழும உ-க்குக் குறைய சாதனம்.

End:

தானம்பண்ணும் கருதகிராமம் (?)

வழுதூர் நடுவக்கரை சிறுதாலூர்.

பொக்கராயர் சந்திக்கராயர் அருளிச்செய்தபடிக்கு 1328-க்கு விய ஷூத்தில் தானம் கொடுத்தது.

குலோத்துங்கசோழநல்லூரில் திரிபுவனசக்கரவர்த்தி[ய](க)ள் விட்ட நிலம் கஉ-வேலி.

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் கோயிலுக்குச் சிலரால் கொடுக்கப்பட்ட கிராமம், நிலம் முதலியவற்றின் விவரத்தைக் கூறுவது. காலம் தெரியவில்லை.

(h) திருக்கழுக்குன்றம் குருக்கள்மார்வரலாறு.

TIRUKKAḺUKKUNṞAM GURUKKAḶMĀRVARALĀṞU.

Foll. 7b—12b. *from D. 2772.*

Gives a short history of the worshipping priests in Tirukkaḻukkunṟam describing the emoluments received by them at different times for conducting the worship of God Śiva in that temple. Also incidentally narrates the structural constructions as well as repairs made in the Tirukkaḻukkunṟam temple by Pērambalapaṇḍāram and Cidambarapaṇḍāram.

Date of this statement: 4th day of Āvaṇi in the year Śukla.

Beginning:

திருக்கழுக்குன்றம் குருக்கள்மார் வரலாறு.

வடக்கே மந்தரகாளிபுரத்திலே யிருக்கச்சே ராசேந்திரசோழராசாதனக்குப் பிரமஹத்திதோஷம் போதற்காகக் கங்காஸ்தானத்துக்குப் போகச்சே ராச்சியங்களிலிருக்கப்பட்ட ஸ்தலங்கடோறும் கோயிலுக்குள்ளே சுவாமி தரிசனம் பண்ணப்போகச்சே ராசா சோழன்பேரிலே இருக்கிற பிரமகத்தி கோபுரவாசலிலே நின்றிருந்து தரிசனம் பண்ணிக்கொண்டுவரச்சே (. . . . . . .) மந்தரகாளிபுரத்துக்குப் போகச்சே ஊருக்கு வெளியிலேதானே பிரமகத்தி நின்றிருந்தது (. . . . . . .) ராசா திரும்பவும் மந்தரகாளிபுரத்துக்குவந்து அந்த ஊரில் இருந்த ஆதிசைவர்கள் நல்ல யோக்கியதை உடையவர்கள் மந்தரசாமர்த்தியம் உள்ளவர்கள் என்று ராசா மனசுக்குத்தோன்றி எங்கள் நான்கு கோத்திரிகாளைக்கூட அழைத்துக்கொண்டு, தன்னுடைய தேசத்தில் இருக்கப்பட்ட திருக்கழுக்குன்றத்தலத்திலே இருக்கும்படிவைச்சு சுவாமியாருக்குப் பூசைபண்ணும்படியாய் எங்களைத் தாபித்து அதுக்காக எங்களுக்கு இந்தக்கிராமத்தைப் பிரம்மதேயமாய்க் கொடுத்து (. . . . .) சுவாமி பிரசாதமும், கிராம சர்வமான்னியமும்

அனுபவித்துக்கொண்டுவந்தோம்; அதன் பிற்காலங்களில் கிருஷ்ணராயர் ராச்சியபாரம் பண்ணச்சே இந்த ஸ்தலத்தில் சுவாமியார் குங்கிலிய பண்டாரத்தை ஆளக்கொண்டு அந்த(ப்) பண்டாரம் வந்து [சிறுது](சில)நாள் கோயில்தர்மம் விசாரிச்சுக்கொண்டிருந்தார்.

End:

அதன்பிறகு சாத்துல்கான்சுபாவில் நம்பறை வேங்கடராமய்யர் இந்தச் சீமைக்கு அமல் வாங்கிக்கொண்டுவந்தார். அவர் இந்தக் கோயிலைப்பார்த்துக் கோபுரவாசலில் சுவர் வைத்திருக்கிறதைத் தள்ளிப்போட்டு (. . . .) இந்த ஊரிலே கொஞ்சம் மானியமும் இந்த மாகாணக்கிராமங்களில் மேரையும் கொடுத்துப் பூசைநிவேதனம் உற்சவம் (முதலியவற்றை) வெகு உத்தாரமாய் நடப்பிச்சார். (. . . .) பிறகும் முதலிகான்சுபாபுல் அப்பாச்சி நயினார் இந்தச்சீமைகுத்தகையாய் அமல் வாங்கிக்கொண்டு வந்தார். (. . . . . .) செங்கல்பட்டு சீமைக்குக் கலத்துக்கு நாழி மேரையும், அறுபத்தாறு காணிமானியமும், முத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நாச்சிமேடு, மாதளங்குப்பம் ஆக நாலு கிராமம் சுரோத்திரியமும் சிவவு வாங்கிக்கொடுத்து அதுமுதலாய்ப் பூசைநிவேதனமும் மகோற்சவமும் நடந்தது. அந்தபடிக்கு இப்போ(து) கும்பினியார் அவர்களும் நடப்பிச்சுக் கொண்டுவருகிறார்கள். இதிலே மாதளங்குப்பம் சுரோத்திரியகிராமம் மாத்திரம் ஐதர்க்கலாபனை கழிச்சபிறகு பராபவவருஷம் முதல் கட்டுப்பட்டிருக்கிறது. (. . . . . . .) இந்தப்படிக்கு நாங்கள் பூசைபண்ணிக்கொண்டு சுவாமி பிரசாதமும் வாங்கிக்கொண்டு கிராமத்தில் பயிர்செய்துகொண்டு இந்தத்தலத்தில் காத்திருக்கிறோம்.

Colophon:

இந்தப்படிக்கு நாங்கள் கேள்வியானதும் அறிஞ்சதும் எழுதிவைச்ச வரவாறு.

சுக்கில௵ ஆவணி௴ 4௳.

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் குருக்கள்மாருடைய வரலாற்றையும், அவ்வூர்க் கோவில் வரலாற்றையும் தெரிவிப்பது; ராசேந்திர சோழனென்னும் அரசன் மந்தரகாளிபுரத்திலிருந்து குருக்கள்களை அழைத்துவந்து திருக்கழுக்குன்றத்தைப் பிரமதேயமாகக் கொடுத்தமையும் கிருஷ்ணராயரால் பேரம்பலபண்டாரம் 50 கிராமங்களைப் பெற்று வேதகிரீசுவரருடைய பழைய கோபுரத்தைப்பிரித்துப் புதிதாக 5-கோபுரங்கள் கட்டி, வேறு சில திருப்பணிகளும் செய்தமையும், சிதம்பரபண்டாரமென்பவர் மண்டபத்திருப்பணி முதலியவற்றைச் செய்தமையும், (இரண்டாம்) சிதம்பரபண்டாரத்தின் காலத்தில் துருக்கர்கள் ஷை கோயில் விஷயத்திற்செய்த அகிருத்யங்களும், சித்தப்பராயர் சங்கரராயரென்பவர்கள், திருக்கழுக்குன்றமுடையாருக்கு மேரையும், மானியமும் விட்டு பூசை, உற்சவம் நடத்தினமையும், அதன்பின் நமச்சிவாய பண்டாரத்தின் காலத்தில் துருக்கர்கள் சந்நிதிக்குச்செய்துவந்த கேடுகளும், வேங்கடராமய்யரால் அவைகள் நிவர்த்தியாய்ப் பழையபடி பூசை நைவேத்தியம் முதலியன நடந்துவந்தமையும், அப்பாச்சிநயினார், செங்கல்பட்டு சீமைகலத்துக்கு நாழி மேரையும், 66-காணிமானியமும், முத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நா(ய்)ச்சிமேடு, மாதளங்குப்பம் முதலிய நான்கு கிரா

மங்களைச் சுரோத்திரியமாக, திருக்கழுக்குன்றமுடையார்க்கு விட்டு உற்சவம் முதலியன வெகு விமரிசையாக நடக்கும்படி செய்தமையும் ஆகிய இவைகள் விரிவாக இதிற் கூறப்பெற்றுள்ளன. எழுதியது, சுக்கில௵ ஆவணி௴ 4௳ என்றுமட்டும் இருத்தலின் காலம் விளங்கவில்லை.

(i) பழைய அரசர்களாண்டவருஷங்கள்.

PAḶAIYA ARAŚARKAḶĀṆḌAVARUṢAṄGAḶ.

Foll. 13*a*—15*b*. from. D. 2772.

Purports to give the names of the ancient kings who ruled over India together with the time of their sovereignty.

Beginning:

நந்தன நாம சம்வத்சர . . . . . சிய (?) பெலிபந்தனுதி புருஷகெத காலப்பிரம(ா)ணுதி எழுதுகிறது.

பெலிபந்தனுதி ராசா ராச்சியம் ௵ ௧௧ கோடியும் ௩௰௮ லட்சம் ௮௲௮௱௫௰௩.

அரிச்சந்திர மகாராச ௵ ௧௪ கோடியும் ௨௯ லட்சம் ௩௯௲௯௱௭௪.

நளமகாராச ௵ ௧௩ கோடியும் ௩௭ லட்சம் ௨௰௲௫௱௩௪.

புருகுச்ச[ன்]ராசா ௵ ௧௨ கோடியும் ௩௮ லடசம் ௪௪௲௫௬௫.

புரூரவ மகாராசா ௵ ௧௧ கோடியும் ௨௬ லட்சம் ௬௪௲௬௱௭௰.

சகர[ன்] ராசா ௵ ௧௧ கோடியும் ௨௫ லட்சம் ௩௮௲௫௱௪௰.

கார்த்திவீரியராசா ௵ ௧௦ கோடியும் ௨௰௪ லட்சம் ௩௪௲௯௱௰௬.

அங்கராசா ௵ ௯ கோடியும் ௧௯ லட்சம் ௩௮௲௮௱௫௫.

(* * * *)

பாண்டவர்(க)ள் ௵ ௪௲௮௱௫௬.

பரிட்சித்து மகாராசா ௵ ௪௲௮௱௩௰.

செனமேசெய[ன்] ராசா ௵ ௪௲௫௱௨௰.

உதய மகாராசா ௵ ௪௲௬௱௮௰௮.

விசயதேவ ராசா ௵ ௪௲௬௱௭௰௬.

செயதேவ ராசா ௵ ௨௲௪௱௩௰௩.

சாலிவாகன ராசா ௵ ௲௬௱௧௰.

சதுர்முக ராசா ௵ ௩௲௫௱௰௨.

கண்ணுவமனு ராசா ௵ ௩௲௫௱௬௰௫.

மகிபால ராசா ௵ ௩௲௬௰௬.

End:

திர்மாணதேவராயர் ௵ ௨௲௱௪௰௫.

மகாபலதேவராயர் ௵ ௨௲௬௱௨௰௮.

ஸ்ரீநாதராயர் ௵ ௨௲௫௱௬௰௮.

மல்லிநாதராயர் ௵ ௨௲௨௱௭௰௫.

சந்திர[பு](கு)த்த[ன்] மகாராயர் ௵ ௲௩௱௩௰௭.

போச ராசா ௵ ௲௭௱௬௰௧.

(* * * *)

ராசராச சோளன் ஹு தூஙாஙயங.
வல்லாளராய ராசா ஹு அாசய.
சின்னவல்லாளீ ராசா ஹு எாகூயகூ.

(* * * *)

பிரதாபருத்திர ராசா ஹு ஙாகூயக.
மல்லீசுர ராசா ஹு ஙாருயஉ.
அனவென ராசா (?) ஹுஙாஉயஎ
திருமலராய ராசா ஹு ஙாஉயஉ.
கெசபதிகபிலேசுவர ராசா ஹு ஙாயஎ.
வீரநரசிம்ம ராசா ஹு உாகூயகூ.
கி(ரு)ஷ்ணராயர் ஹு உாஎயஎ.
அச்சுதராயர் ஹு உாசயஅ.
ராமராயர் ஹு உாயஎ.
திருமலைராயர் ஹு உாஉ.
ஸ்ரீரங்கராயர் ஹு ாஅயரு.
வேங்கடபதிராயர் ஹு ாருயகூ.
சிறக்கராயர் (?) ஹு ாருய்ரு.
ராமச்சந்திரராயர் ஹு ாசயகூ.
ஸ்ரீரங்கராயர் ஹு ாஉயஅ.

இப்படிப்பிட்ட தர்[ம்]ம ராசாக்கள் ராச்சியபாரம் பண்[ண](ணிஞ)ர்கள்.

(கு-பு.)—

இது, பூர்வீக அரசர்கள் ஆண்டகாலம், இஃதெழுதப்பட்ட காலத்துக்கு இத்தனைவருஷங்களுக்குமுன் என்பதைத் தெரிவிப்பதாகுமென்று தோற்றுகிறது. இதை எழுதிவைத்தவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

(j) திருக்கழுக்குன்றங்கோயில்நித்தியகட்டளை திட்டம்.

TIRUKKALUKKUNṚAṄKŌYIL NITTIYAKAṬṬAḶAI DIṬṬAM.

Foll. 15*b*—16*b*. from D. 2773. j-t.

Gives a list of the articles daily used in the Vēdagirīśvarar temple at Tirukkalukkunṛam, such as rice, dholl, ghee, oil, etc., together with the quantity of each of the items so expended.

Beginning:

திருக்கழுக்குன்றங்கோயில் பிலவங்க ஹு நாள் க-க்கு நித்திய
கட்டளை திட்டம்.

பாருகாலால் அரிசி த ரு ஏஉ புயகூஉ.
பருப்பு சேர் உ-க்கு பு-உ.
நெய் பலம் யஉவ-க்கு பு-உவரு.
நல்லெ(ண்ணெய்) சேர் யக ஞு-க்கு
பு யஉஞ.
சக்கரை பலம் யகூ-க்கு பு-கரு.
தேன் பலம் ச-க்கு பு-ρ.
மஞ்சள் பலம் ஙக்கு பு-வரு.

End:

மிளகு பலம் ஞ-க்கு பு-ருஉ.
மாசேர் ஞக்கு பு-ஞு.
சந்தனக்கட்டை பலம் ரு-க்கு பு-ஞ
ஆக பு-சகவ.

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றம் வேதகிரீச்வரர் கோயிலுக்குத் தினப்படி செல வாகிவந்த சாமான்களின் திட்ட விவரமுதலியவற்றை விளக்குவது. இதன் பின் ஷெ கோயில் ஸம்பந்தமாக மற்றும் சிலவிஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. காலம் விளங்கவில்லை.

(k) திருக்கழுக்குன்றமுடையாருக்குரியதோட்டங்கள்.

TIRUKKAḺUKKUNṞAMUḌAIYĀRUKKURIYA TŌṬṬAṄGAḶ.

Foll. 16*b*—17*b*.

Gives a list of the gardens belonging to the temple in Tirukkaḻuk-kunṟam with indications of the nature of the produce of those gardens.

Beginning :

தோட்டம்.

கிழக்குப் பூந்தோட்டத்தில் பழசு தென்னமரம்.

வேங்கடாசல நாயனர் தோட்டத்தில் பழசு தென்னமரம்.

சங்கு தீர்த்தக்கரை தென்னமரம்.

தேருவீதி பழசு தென்னமரம்.

வடக்குச்சாலே தென்னமரம்.

சின்னபாட்டை தென்னமரம் புளியமரம்.

ஏரி கீழ்த்தோட்டம் கிச்சிலிமரம் பலாமரம் வகைரா.

தெற்கு இலுப்பைத் தோப்பு ... ... க

புளியந் தோப்பு ... ... க

பிரதட்சிண வழியில் சாலே உள்பட இலுப்பைத் தோப்பு... உ

கிழக்கு இலுப்பைத் தோப்பு ... ... க

End :

மாததெரி வா(வை)ழத் தோட்டம் ... ... க

கிழக்குப் பூந்தோட்டம் ... ... க

கிணறு பூந்தோட்டம், ... க

வெங்கடாசல நாயனர் பூந்தோட்டம் .. .. க

ஆகத் தோட்டம் ௪-ம் கம்பத்த உடவாரத்தில் வரும்படி குடிவாரமும் கோயிலேச் சேருகிறது.

(கு-பு.)—

இது, ஸ்ரீதிருக்கழுக்குன்றமுடைய நாயனருக்குச் சொந்தமான தோட்டங் களின் விவரத்தையும், தோப்புக்களின் விவரத்தையும் விளக்குவது. இதைத் தொகுத்தெழுதியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

(l) வேதகிரீசுவரர் ஈஸ் துவை (?)

VĒDAGIRĪŚVARARĪSTUVAI (?)

Foll. 17*b*—18*a*.

Gives some details in connection with the lease of three village belonging to Tirukkaḻukkunṟam temple.

Beginning :

திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரசுவாமியாருக்கு நடக்கிற யிஸ்துவை.

சுரோத்திரிய கிராமம் :—முத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நாச்சிமேடு. ஆகக் கிராமம் ௩-ம் அந்தந்த குடிகள் இசாராப்பண்ணிக் கொண்டு க(ெ)லக்[கட்]டர் கச்சேரிக்குப் பணம் கட்டுகிறார்கள்.

End :

செங்கல்பட்டு சீமை மாமூல்தெசாடாட டிக்குக் கிராமங்களுக்கு வாரப் பற்றுப்போக நின்ற உடவாரத்துக்கு (கலம்)௫௰ ௨ கிராமங்களில் மிகுதியும் அ(. . .)-உட்பட நஞ்சு சகத்துக்கு வரும்படி மேல் (. . .) ஆக மேரை மிகுதியும் வரும்படி மிட்டாதாரரைச் சேர்ந்து அருருக்குப் பணம் செலுத்துகிறார்கள். க(ை)டய(ம்) பாக்கம், கோட்டைக்காடு ஆகிய இரண்டில் தென்னந் தோப்பு (காணி)௫-க்கு அந்த [ஊர்] கிராமத்தார் மாரி பத்தில் சேருது.

(கு-பு.)—

இதில் முத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நாய்ச்சிமேடு ஆகிய மூன்று சுரோத்திரிய கிராமங்களிலுள்ளவர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய வரியை எப்படிச் செலுத்திவந்தார்கள் என்ற விவரம் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

(m) திருக்கழுக்குன்றம் கோயில்நுந்தாவிளக்கின்விவரம்.

TIRUKKAḺUKKUNṞAMKŌYIL NUNDĀVIḶAKKIN VIVARAM.

Foll. 18*a*—18*b*.

Gives a list of the lamps lighted in the temple at Tirukkaḻukkunṟam together with the names of certain persons who arranged to maintain that charity.

Beginning :

திருக்கழுக்குன்றம் கோயில் [ஓடை](உ)பய விளக்கு வயணம்.

வேங்கடராமையர் மாரிபத்து ஒரு பல விளக்கு ...	௪0
சுப்பராய பண்டாரம் மாரிபத்து ஒரு பலம் விளக்கு ...	௹உ
5 பல விளக்கு	க
4 „	உ

End :

3 பல விளக்கு	க
2 „	உ
½ „	௬
1½ „	௩
ஆகச் சுப்பராய பண்டாரம் மாரிபத்து விளக்கு	௬௱
ஆக விளக்கு ...	௱௩

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் கோயில் விளக்குத் தர்மத்தைத் தெரிவிப்பது.

(*n*) பேரம்பல பண்டாரத்தின் வரலாறு.

PĒRAMBALA PAṆḌĀRATTIN VARALĀṞU.

Foll. 18*b*—19*a*.

Herein it is stated that Pērambalapaṇḍāram made some construction and arranged for the expenses of daily worship, etc., in the Tirukkaḻukkunṟam temple out of the income derived from certain lands obtained as Sarvamānyam from Kṛṣṇadēvarāyar. The names of the six Paṇḍārams who succeeded Pērambalapaṇḍāram and continued the charities after him are given. The details of the facts given here are said to have been written during the time of the seventh Paṇḍāram whose name is not given.

Beginning :

திருக்கழுக்குன்றம் பேரம்பல பண்டாரம் வரலாறு.

சங்குமுக	...	...	...	...	...	௰(?)
கோயில்	...	...	...	...	...	௧
பொன்னிட்ட நாதர் கோயில்			...	...	...	௧
ருத்திரகோடி கிராமத்தில் ருத்திரகோடீசுவரர் கோர்யில்						௧

ஆலயம் பிராகாரம் கோபுரமும் கட்டிச் சிவப்பிரதிஷ்டை பண்ணினார். இந்தத்தர்ம கைங்கரியத்துக்குக் கிருஷ்ணராயர் அண்டை காத்திருந்து,

கட்டளைக்குக் கிராமம்	...	...	...	...	௩௨
திருப்பணி வேலைக்குக் கிராமம்	...	...	...	...	௧௮

ஆகக் கிராமம் ௫௰-ம் சருவமானியமாக வா்ங்கிக் கோயிலுக்குச் ச(ம்)பத்[தமு](து)ம் வைத்து கைங்கரியம் நடப்பித்தார்.

End :

அது முதல்கொண்டு இரண்டாம்பட்டம் சிதம்பர பண்டாரம்.

3-ஆம் பட்டம் பேரம்பல பண்டாரம்.

4-ஆம் ,, சிதம்பர பண்டாரம்.

5-ஆம் ,, நமச்சிவாயபண்டாரம்.

6-ஆம் ,, வைத்தியநாத பண்டாரம்.

7-ஆம் பட்டம் எனக்கு மன்மதனில் அஞ்சு வயசில் பட்டம் ஆச்சுது. இந்தப்படிக்கு (நாளது) வரைக்கும் தா்ம கைங்கா்யம் நடந்தது. இப்புறம் 4-ஆம் பட்டத்தி(லிருந்து) அபிஷேக கட்டளை மாத்திரம் விசா்ரிச்சுக்கொண்டு வருகிறது.

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றத்தில், பேரம்பல பண்டாரம் என்ற ஒருவர், கிருஷ்ண தேவராயரிடமிருந்து 50 கிராமங்களைச் சருவமானியமாகப்பெற்று, அவற்றின் வரும்படியைக்கொண்டு கோயிற்றிருப்பணி செய்து, கட்டளை வைத்துத் தரும கைங்கர்யம் நடத்திவந்த விவரத்தையும், அவருக்குப் பின் அவர் பரம்பரையினராய் ஷை கைங்கரியத்தை நடத்திவந்த ஆறு பண்டாரங்களுடைய பெயர்களையுந் தெரிவிக்கிறது. ஷை பரம்பரை 7-வது பண்டாரரால் இஃது எழுதப்பட்டதாகத் தெரிகிறது. அவர் பெயர் தெரியவில்லை.

(o) பேரம்பலபண்டாரத்தின் வரலாறு.
PĒRAMBALAPANḌĀRATTIN VARALĀṞU.

Foll. 19*b*—20*b*.

Gives the life history of Pērambalapanḍāram with a detailed account of the nature of the temple structures constructed by him in Tirukkaulkunṟam.

Beginning:

திருக்கழுக்குன்றம் பேரம்பல பண்டாரம் வரலாறு.

ராயர் நாள் ௵ ௲ாக்கு மேல் பிரபவ௵ தெற்கே தண்டலச்சேரியிலே சமுசார கிருகத்திலே சோழிய வே[ள]ளாளரில் பேரம்பல பிள்ளை என்கிறவர் இருபது வயதிலே இருந்தார். அவருக்கு ஸ்ரீவேதகிரீசுவரசுவாமிகள் சொப்பனம் சாதித்த வயணம் :—

“நம்முடைய ஸ்தலமான திருக்கழுக்குன்றத்தில் நீ வந்து தர்ம கைங்கரியம் நடத்தவே[ணு](ண்டு)மென்றும், அதற்கு ஊர்குருக்கள்மார் உன்னையழை[ச்சு](த்து)க்கொண்டு போ[ரத்துக்](வதற்)கு வருவார்கள்; அவர்களுடனேகூட அந்த ஸ்தலத்துக்குப்போய் கைங்கரியம் நடப்பி” என்று சொப்பனமாய்

End:

ஸ்தலத்தாரும் வ[ந்து](ர), அழை[ச்சு](த்து)க்கொண்டு நடுவழியிலே அச்[சர](சிறு)பாக்கம் என்கிற ஸ்தலத்தில் வந்து இறங்கித் திரவியம் அனு[க்கோ](கூ)லமாய்க் கோயில் ஆலயம் பிரகாரம் கோபுரம் முதலான[த்துக்](வற்றிற்)கு வே(லை) நடந்தது.

இப்புறம் வருகிறபோது கிண(ற்)றிலேவந்து [எ](இ)றங்கி அ(வ்)விடத்திலே ஒரு கோயிலும் அ . . . . யும் மதிலுடனே வேலைவிட்டு நடந்தது.

இப்புறம் திருக்கழுக்குன்றத்துக்கு வந்து குங்கிலிய நாயனுருக்குப் பிறகு ஆதீனத்துக்குப் பட்டம் கட்டிப் பேரம்பல பண்டாரம் என்று பேராச்சுது.

கைங்கரியம் நடந்த வயணம்.

கோபுரம்	௫	சிதம்பரேசுவரர் கோயில்	௧
சபாமண்டபம்	௨	தோடாயி கோயில்	௧
ஆமை மண்டபம்	௧	திருப்பெருந்துறை கோயில்	௧
பிராகாரமதில்.		பொய்யாத பிள்ளையார் கோயில் .	௧
நந்திதீர்த்தம் படி.		சொக்கப் பிள்ளையார் கோயில்	௧
தெசவிடங்க நாயகர் மண்டபம்	௧		

(கு-பு.)—

இது, பேரம்பல பண்டாரத்தின் பிறப்பு, ஜனித்த ஊர், அவர் பட்டத்துக்கு வந்ததற்குரிய காரணம் திருக்கழுக்குன்றத்தில் அவர் சுவாமிக்குச் செய்த திருப்பணி, முதலியவற்றின் விவரங்களைத் தெரிவிப்பது.

(p) வேதகிரீசுவரராது கிராம அட்டவணை.
VĒDAGIRĪŚVARARADU GRĀMA AṬṬAVAṆAI.

Foll. 20*b*—21*b*.

Gives two lists containing the names of villages obtained by Pērambalapaṇḍāram from Kṛṣṇadēvarāyar with a view to devoting the income derived therefrom for the purpose of performing certain services and repairs in the temple at Tirukkal̲ukkun̲ṟam

Beginning:

திருக்கழுக்குன்றம் ஸ்ரீவேதகிரீசுவர சுவாமியாருக்குக் கட்டளைக்கு(ம்) திருப்பணிக்கு(ம்) பேரம்பல பண்டாரம் நாளையிற் சம்பாதித்த கிராமங்களின் சாபிதா.

கட்டளைக் கிராமங்கள்.

(1) தாழம்பேடு.
(2) காங்கயன்குப்பம்.
(3) கோனூர்குப்பம்
(4) பறிதல்மேடு.
(5) கீரைப்பாக்கம்.
(6) புல்லேரி.
(7) அமுர்தம்பள்ளம்.
(8) பூயிலுப்பை.
(9) ஈச்சங்காரணை.
(10) சூரக்குப்பம்.
(11) சிறுதையூர்.
(12) தழுவக்கு(லை)ழ[ஞ்ச](ந்த) நல்லூர்.
(13) பெருந்துரவு.
(14) மங்க்லம்.
(15) முடையூர்.
(16) குறுமுகை.
(17) கத்தேரிமங்கலம்.
(18) நாயலூர்.
(19) பிடாரம்பட்டு.
(20) நாப்பாக்கம்.
(21) வெண்பாக்கம்.
(22) இருங்குணபள்ளி.
(23) நர்லோகசூரியன்.
(24) பிருதிவெள்ளப்பந்தல்.
(25) பேய்க்காரனை.
(26) சின்னக்காட்டுப்பா(க்)கம்.
(27) வசவாபுரம்.
(28) கொற்றிமங்கவம்.
(29) தத்தலூர்.
(30) உழுதமங்கலம்.
(31) தச்சூர்.
(32) போசனகுப்பம்.

பனவெட்டுத் தாங்கல்.

ஆகக் கிராமம் ௩௨ (?)

End:

திருப்பணிக் கிராமங்கள்.

(1) வைவழுதூர்
(2) வடதிம்மூர்.
(3) நடுவக்கரை.
(4) குணற்பாக்கம்.
(5) காட்டுப்பாக்கம்.
(6) கருப்பங்காடு.
(7) இரும்பிலி.
(8) வடபொருத்தபா(க்)கம்.
(9) சம்பாதிதேவநல்லூர்.
(10) முத்திக்குநல்லான்குப்பம்.
(11) மாதளங்குப்பம்.
(12) காந்தராயன்குப்பம்.
(13) சொக்குயார்குப்பம்.
(14) நயினார்குப்பம்.
(15) கொடித்தண்டலம்.
(16) நாச்சிமேடு.
(17) கீழ்நாசங்குப்பம்.
(18) மேலப்பட்டு.

ஆகத் திருப்பணிக் கிராமம் 18.

ஆகக்கிராமம் ௫௦ (?)

(கு-பு.)—

இதில், வேதகிரீசுவரர் ஆலயத்திருப்பணியும், கட்டளையும் செம்மையாக நடத்துவதற்கென்று பேரம்பலபண்டாரம் கிருஷ்ணராயரிடம் பெற்ற 50 கிராமங்களின் பெயர்களும் விவரமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

(ஏ) வேதகிரீசுவரர் மானியம்.
VĒDAGIRĪŚVARAR MĀNIYAM.

Foll. 21*b*—22*b*.

Contains the list of the names of the villages in which certain specified portions of land were given as gifts to Vēdagirīśvararsvāmi temple in Tirukkaḻukkunṟam. Further particulars cannot be made out as the original MS. from which this work was copied gives nothing more.

Beginning:

திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவர சுவாமியார் கோயில் (மானிய) சாபிதா.

நஞ்சை :—

திருக்கழுக்குன்றம்	௵	உ௰சு௮	நெல்விக்குப்பம்	௵	க
கழனிப்பாக்கம்	,,	க	மேலையூர்	,,	உ
ஆண்டிகுப்பம்	,,	ஐ	கரும்பூர்	,,	உ
கருப்பங்காடு	,,	க	செகந்நாதம்பட்டு	,,	க
முத்திக்குநல்வான்குப்பம்	,,	உ	சிறுதையூர்	,,	உ
நாச்சிமேடு	,,	க	தண்டலம்	,,	க
புலியூர்	,,	க	. . . . . ரேர்	,,	ஐ
இரும்பிலி	,,	க	கடும்பாடி	,,	கஹ
முள்ளிப்பாக்கம்	,,	க	பையனூர்	,,	ஐ
தண்டறை	,,	௮			

End:

நடுவக்கரை	௵	உ	பாலையூர்	௵	க
குணற்பாக்கம்	,,	க	ஆதியூர்	,,	க
வல்விபுரம்	,,	க	பொன்பதற்கூட்டம்	,,	௮
களத்தூர்	,,	க	வெம்பிபாக்கம்	,,	வ
வெள்ளப்பந்தல்	,,	௮	ஓழசார்	,,	க
வைவழுதூர்	,,	௫	அம்மணம்பாக்கம்	,,	க
கிளாம்பாக்கம்	,,	க	கருமறிப்பாக்கம்	,,	௭
ஆற்றூர்	,,	௮	மாதளங்குப்பம்	,,	உ

ஆக மீயூ (மானியம்) நஞ்சை ௵. சுங௰சுஐஹ. அஹ௵. கஹ.

ஆக ௵. சுங௰சு.

(கு-பு.)—

இது வேதகிரீசுவரருக்குச் சொந்தமான மானிய நிலங்களின் கணக்கைத் தெரிவிப்பது. மூலப்பிரதியில் இங்குக் குறிக்கப்பட்டுள்ள அளவேயிருந்த லால் இதைப்பற்றி வேறு ஒன்றும் தெரியவில்லை.

(r) திருக்கழுக்குன்றங்கோயில்திட்ட ஜாபிதா.
TIRUKKAḶUKKUNṞAṄKŌYILTIṬṬA JĀPITĀ.

Foll. 22*b*—23*b*.

Gives a list of the grand festivals celebrated in the temple of Nāyanār or Vēdagirīśvarar in Tirukkaḷukkunṟam with the amount allotted for expenditure during each of these festivals.

Beginning :

திருக்கழுக்குன்றம் கோயில் சுக்கிலஷூ திட்ட சாபிதா.

நித்தியக்கட்டளை நாள் க-க்கு -க ௵ ஆக நாள் ௩௱௬௰௫-க்கு ௵ ௩௬௫·

பஞ்சபருவம்.

சுக்கிரவாரம் நாள் க க்கு ௵ வ ஹு. ஆக ஷூத்துக்கு நாள் ௫௰-க்கு ௵ ௰அ௲.

மிகுந்த விசேஷ தினங்கள் ஆடி அஷ்டமி ௵ ௨.

ஆவணிமூலம்	௵	௨	திருக்கார்த்திகை	௵	ரு
விநாயகசதுர்த்தி	,,	க	அலங்காரப் பிரதட்சிணம்.	,,	௬
பவித்திரோற்சவம்	,,	ச௮			
நவராத்திரி	,,	கரு	திருவாதிரை	,,	௩
அன்னபிடேகம்	,,	௭	தனுர்மாசம்	,,	ச
தீபாவளி	,,	க	சங்கராந்தி	,,	௩
கந்தர்சஷ்டி	,,	௨	தெப்பவுச்சவம்	,,	அ

End :

சிவராத்திரி	௵	௬	சித்திராபருவம்	௵	௨
பங்குனியுத்தரம்	,,	க0	கத்திரிபூசை	,,	க
வருடப்பிறப்பு	,,	வ	சீதகும்பாபிடேகம்	,,	௨௨
மகோற்சவம்	,,	௱ரு௰	கொண்ணையடி	,,	க
விடாயாற்றி	,,	ரு௨	கிரகணம்	,,	வ

ஆக ஸ்ரீ விசேஷதினம் ௵ ௨௱௨௰௧.

ஆகக் கோயிற் செலவு (வராகன்) ௬௱௰௨௭.

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றமுடைய நாயனருக்குச செய்யும் விசேஷ உற்சவங்களின் பெயரையும் அவற்றிற்காக ஏற்பட்ட திட்டத்தையும் விவரமாகத் தெரிவிப்பது.

(s) திருக்கழுக்குன்றங்கோயில் வேலைக்காரர்களின ஜாபிதா.
TIRUKKALUKKUNṞANKŌYIL VĒLAIKKĀRARKAḶIN JĀPITĀ.

Foll. 23*b*—24*b*.

Gives a list of the servants attached to the Tirukkaḷukkunṟam temple together with their respective monthly salaries.

Beginning :

திருக்கழுக்குன்றம் கோயில் சுக்கிலவுஷ சிப்பந்தி சாபிதா.

மாசம் 1-க்கு	அமீனு	(வராகன்)	ச
,, ,,	முஷிரிப்பு	,,	ரூ
,, ,,	மணியம்	,,	கஉ
,, ,,	மலை(த்)திருமஞ்சனம்	,,	ளு
,, ,,	ஆற்று(த்)திருமஞ்சனம்	,,	க
,, ,,	திருமலை வேதபாராயணம்	,,	கவ
,, ,,	தாழக்கோயில் வேதபாராயணம்	,,	க
,, ,,	மலை நித்தியவாசி	,,	ளு
,, ,,	தாழக்கோயில் சுயம்பாகி	,,	க
,, ,,	பரிசாரகன்	,,	கவ
,, ,,	கட்டளை(ப்)பண்டாரம்	,,	க
,, ,,	உக்கிராணம்	,,	க
,, ,,	கணக்குப்பிள்ளை	,,	உ
,, ,,	செவகநப்பர் இருவருக்கு	,,	,,
,, ,,	நிமித்தம் நபர் 6-க்கு	,,	சு
,, ,,	திருவலகு	,,	ஓ
,, ,,	அரிசி ஆய்கிறவள்	,,	,,
,, ,,	சங்கு பண்டாரம்	,,	க

End :

மாசம் 1-க்கு	மலை நாகசுரம்	(வராகன்)	கஉ
,, ,,	தாழக்கோயில் நாகசுரம்	,,	,,
,, ,,	மலை மேளம்	,,	ளு
,, ,,	தாழக்கோயில் மேளம்	,,	ஓ
,, ,,	சாலியமாட்டு இடையர்	,,	ளு
ஆக(ச்) சிப்பந்தி(ச் செலவு) மாசம் 1-க்கு		,,	ரூஅஉ
ஆக வுஷ-க்கு		,,	சாசூஉ

ஆகக் கோயில் செலவு சிப்பந்தி(ச் செலவு) உட்பட வராகன் தஎயசளு.

(கு பு.)—

இது, திருக்கழுக்குன்றம் கோயிலுக்குச் சிப்பந்திகள் எத்துணையர் என்பதையும், அவர்கட்குக் கொடுத்துவந்த சம்பள விவரத்தையும் தெரிவிப்பது.

———

(*t*) திருக்கழுக்குன்றங்கோயில் பூர்வோத்தரம்.
TIRUKKAḺUKKUNṞAṄ KŌYIL PŪRVŌTTARAM.

Foll. 24*b*—34*a*. Fol. 34*b* is left blank.

Gives a short history of the temple constructions and additions made in Tirukkaḻukkunṟam by certain persons such as Śuraguru, Iraṇyaśirasu, Sampātidēvar, Sūryadēvan, Pērambalapaṇḍāram, Maṅgutti Vīrabhadran and others,

Beginning:

திருக்கழுக்குன்றம் கோயில் பூர்வோத்தரம்.

சுரகுருராசா நாளையில் திருமலைக்குக் கோயில் கட்டி[வச்சு](வைத்து) ஆலயம் எற்படுத்தி, கிராமத்துக்கு . . . . . தியும் ஏற்படுத்தி யுற்சவமும் பண்ணி[வச்சா](வைத்தா)ன். பிற்பாடு தான் சொந்தமாய்ப் பட்சிபாறை யண்டை கோவில்கட்டி சிவப்பிரதிஷ்டை பண்ணினான்; அதுக்கு வடக்கே மேற்படி ராசா(வின்) மந்திரி இரணிய(சிர)சு கோவில்கட்டி சிவப்பிரதிஷ்டைபண்ணினான்.

இதின் வடமேற்குச் சம்பாதிதேவர் பூசைபண்ணின சுவாமிக்குச் சுரகுரு ராசா கோயில்கட்டி[வச்சா](வைத்தா)ன்.

திருமலைக்குக் கீழ்ப்பக்கம் ஒரு கல்மண்டபம் சுரகுரு ராசா, மலையைத் துளைச்சு [மண்டபம்] எற்படுத்தி சுவாமியும் எற்படுத்தி சுவாமி பிரதிஷ்டை பண்ணுவித்தான்.

End:

சோபகிருது வருஷம் வடுகநாதனாளையில் அமுலுக்குவந்து அநேகம் பணம் செலவுபண்ணி, காட்டையும் வெட்டி, தேரும்பண்[ணி](ணு)வி[ச்சு](த்துச்) சங்குதீர்த்தத்துக் குளமண் எடுப்பி[ச்சு](த்துப்) பாதிபடியுங் கட்டுவித்தார்.

சங்கு தீர்த்தத்தில் யுவ ஹூ அப்பாச்சி நயினார் அமுலில் இரண்டு சங்கம் பிறந்து கோயிலிலே (டை)வ[ச்சி](த்தி)ருந்[து](த)து. ஐதர் கலாபத்திலே போய்விட்டது. அதன்பிறகு பராபவ ஹூ வடுகநாத முதலியார் அமுலில் ஒரு சங்கம் பிறந்து (டை)வ[ச்சி](த்தி)ருக்[கு](கிற)து; அது வா . . விருத்தம்; அதன் பிறகு தேசம் சுபிட்சமில்லாததனாலே சங்கம் உற்பத்தியில்லை. பன்னிரண்டு வருஷத்துக்கு ஒருதரம் சங்கம் உற்பத்தியாகிற நிபந்தனை இல்லை. இதுக்கு முன்னாலே மாறக . . . . சங்கம் பிரத்தி[ஷ்ஷ](யட்ச)ம் ஆன பிற்பாடு கால அவாந்தரம் வந்தபடியினாலே சங்கம் பிறந்ததும் இருந்ததும் தெரியாது. அம்மன் பிடா . . . . கோயில் கிராமத்தார் கட்டுவிச்சார்கள். (. . . . .) மாயேசுரபட்டர் காலாபட்டரையும் கோயிற்கணக்கு புலிப் பாக்கமுடையாரையும் கோயில் பரிசனங்களையும் தந்தோமென்றருளினாரே. (கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் ஆளுடைய நாயனாரையும், கிரிசுந்தரி யம்பிகையையும் வழிபட்டுப் பேறுபெற்றோர்களாகிய சுரகுரு, இரணியசிரசு, சம்பாதிதேவர், காந்தராயன், சூரியதேவன், பேரம்பலபண்டாரம், மங்குட்டி வீரபத்திரன், திருமணம் நல்லதம்பி முதலியார், வடுகநாத முதலியார் முதலியவர்கள் திருக்கழுக்குன்றம் கோயிலிற்செய்த திருப்பணிகளின் விவரத்தைச் சுருக்கமாக விளக்குவது. இஃதெழுதப்பட்ட காலம் முதலியன விளங்கவில்லை.

(u) திருவேதிகுடிச்சிலாசாசனம்.
TIRUVĒDIKUḌI ŚILĀŚĀSANAM.

Foll. 35*a*—35*b*.

A copy of the inscriptions on stone to be found in one of the innermost compartments of the temple at Tiruvēdikuḍi. It is dated

the 21st year in the reign of Gōrājakēsari. The inscriptions relate to the construction of the temple by certain persons.

Beginning:

திருவேதிகுடிச் சிலாசாசனம்.

திருவேதிகுடி யீசுவரன் கோயில் சுவாமிபேர் வேதபுரீசுவரர். அம்(மை)ம[ன்]பேர் மங்கை[யி]க்கரசி.

இக்கோயில் கர்ப்பக்கிரகத்தில் எழுதியிருக்கிற வயணம்.

ஸ்ரீசயிரு-வது.

ஸ்வஸ்திஸ்ரீ கோராசகேசரிபன்ம(ரான) மஹாராஜாவுக்கு யாண்டு உக-ஆவது திருவேதிகுடி மஹாதேவர்க்கு கெபுரநாட்டு மயிலையார் நாடி மயிலையாள் குடின கொற்றவுளன குடிக்க மேற்குடி பாரணிபார் நாயிற்று விசையார் இக்கோயில் மஹாதேவர்க் குடியாலறிந்த ஸ்ரீவீராதிபக் குடியாட்டுமேறயான மேலயன் வச்சன் மடியார் விணக்க ஓர்ப்புரமான இவ்வூரில்

End:

புறமான யார்கெல்லை பச்சபொனழுப்பவதி தேவதானம் திரிமஞ்சிமெகல்லை நிலமயவியாய் இக்கோயில் மஹாதேவர்க்குத்தானமாக விட்டோம்.

மஹாகெசாபத்து நகர் தொஷனயறிவோம்.

(கு-பு.)—

இது திருவேதிகுடிக்கோவில் கர்ப்பக்கிருகத்தில் உள்ள ஒரு ஸாஸனத்தின் நகல். கோராச கேசரி மஹாராஜாநாளில் சிலர் ஷை கோவிலைக் கட்டுவித்த விவரத்தைத் தெரிவிக்கிறது.

(v) திருவேதிகுடிச் சிலாசாசனம்.

TIRUVĒDIKUḌI ŚILĀŚĀSANAM.

Foll. 35*b*—36*a*.

A copy of the inscriptions on stone found in Tiruvēdikuḍi relating to the performance of certain lighting charities in the temple therein. It is dated the 21st year in the reign of Gōparakēsari.

Beginning:

கசகூ-வது.

ஸ்வஸ்திஸ்ரீகோபரகேசரி பன்மர்க்கு யாண்டு (இரு)பத்தொன்ருவது இந்த நாட்டுவிடத்து கீழ்பிரம்பில் தேவதானபயாமலாற்றிருவேதிகுடி மஹாதேவர்க்கு கீழராபாவசமாக(ச்)சரககறி . . . . காணிபுரத்து ஓலைபுரிய சாத்து இரகள் புரகத்தூர் கழிஞ்சு பொன்பத்தின் கழஞ்சு வாகண்டு விளக்கெரிவதற்கு இக்கோயில் திருவேதிகுடி ஊர் தேவர்க்கு நாகிநும்

ஷேவமஹாதேவர்க்கு விளக்குச் சாந்திர சிக்கல் வெட்டவும். இவ்வூரில் பொ மாளும் திருவேதி மாபுடியாறு தேவர்பணி நாயாகா மெஞ்சடில விளக்கு . . . . . . ரியவும் பொருள்வதிகுடனத தேவராயபுரமுடையோம்.

End:

இத்திருவிளக்கு எறிகாவு வாளச்சிரு வாலியராலறதும் உடுமௌமாரியக குடிய புதியாலகிலததால தேவதானம் பெரியாகனவகநூக்குடியால் இக்க டுவமஹாதேவர்க்கு உடையோம். மந்தண பொன்பறியானிலம் இரண்டும்மா அரைக்காணி முந்திரிகையும் விளக்கெரியவிட்டோம். இப்படியால் . . . . கடவபெபிகளைய ஸ்ரீபாதமென தலைமேல் எறிவாக அறிவோம்.

(கு-பு.)—

இது திருவேதிகுடிக்கோயிலில் உள்ள ஒரு சாசனத்தின் நகல். அந்தக் மகாவில் திருவிளக்குத் தருமத்தின் விவரத்தைக் கூறுவது. இதன் காலம் கோபரகேசரிப்பன்மர்க்கு 21-வது வருஷம் எனக் கூறப்பட்டிருக்கிறது.

(w) திருவேதிகுடிக்கோயில் சாசனம்.

TIRUVĒDIKUḌIKKOYIL ŚĀSANAM.

Foll. 36b—37a.

A copy of an inscription in the temple at Tiruvēdikuḍi relating to the grant of certain lands to the said temple during the time of Kulōttaṅgacōḻan for the performance of certain daily and occasional services therein.

Beginning:

கசள-வது.

ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு எழாவது திரு-வேதிகுடி மஹாதேவர்க்கு இந்நாட்டு உடையார் திருவேதிகுடிநாயனுருக்கு இக்கடவூர் பிரவால கூட்டத்துண்டும் இவ்வூர் நாயனுருக்கு இக்கோயில் பெரவால மனந்தருளியால யெண்டும் குமாறபத்திநாயனுருக்கு வேலப்பிரயால் கூடிய வசம் பிரவால கூட்டத்து யால இவ்வூர் திருவேதிக்குடி மஹா தேவர்க்கு

End:

பூசை நிமித்தியமும் வியா[ப](பி)க்குறதாத இந்நாட்டு உடையார் கொங் கையாத்துக்கும் திருவிஞ்சியூர்[பி](பு)றத்துதிலம் இவ்வூரில் நிலமாவது நாலுமா அரைக்காணி முந்திரிகை நிலம்; இந்நிலம் நாலுமா அரைக்காணி முந்திரிகையும் இக்கோயில் இந்நாயனுருக்குத் தானமாகவிட்டோம்.

இந்த(த்)தர்மத்துக்கு யாதாமொருவன் பரிபாலனம் பண்ணுகிறபேர்களுக் குக்[ெ]கங்காதானம் பண்ணின புண்ணியமுண்டு.

(கு-பு.)—

இதுவும் முன்சொன்ன கோயிலிலுள்ளது. இதில் குலோத்துங்க சோழராஜன் காலத்தில் திருவேதிகுடிக் கோவிலுக்கு நித்திய நைமித்தியங்களுக் காகச் சிலரால் நாலுமா அரைக்காணி முந்திரி நிலம் மானியமாக விடப் பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது.

(*x*) திருவேதிகுடிக்கோயில் சாசனம்.

TIRUVĒDIKUḌIKKŌYIL ŚĀSANAM.

Foll. 37*a*—37*b*.

A copy of an inscription in the temple at Tiruvēdikuḍi relating to the gift of a certain picee of land to the said temple for the due performance therein of certain repairs and occasional services. The inscription is dated the 11th year of the reign of Kulōttuṅgacōḷadēvar.

Beginning:

கசஅ-வது.

ஸ்வஸ்தி ஸ்ரீ ம(ான்)குலோத்துங்க சோழதேவர்களுக்கு யாண்டு கக-ஆவது திருவேதிகுடி நாயனார் மஹாதேவர்களுக்கு இவ்வூர் இந்நாட்டு உடையார் வீர முக்சணித்தேவர் . . . . இக்கடலூர் மஹா தேவர்க்கு(த்) திருப்பணிக்கும் திருநிமித்தியத்துக்கும் இவ்வூர் திருவேதிகுடி மஹா தேவருக்குவிட்டது

End:

பூஞ்சோலைக்கில்லைக்கடுக்த வடவாத்துடையாகெல்லை நிலம் ஒன்றேகால் நிலமும் இந்நாட்டு இவ்வூர் மஹாதேவர்க்கு(ப்) பிரிதிபிரிசியா[யி](ய்த்) தானமாக திருப்பணிக்கும் திருநிமித்தியத்துக்கும் நீர்வார்த்துக்[கு](கொ)டுத்தேன். இவையறிவோம்.

இப்படிக்கு,

இ[வை](து)குருகுலராசன் எழுத்து.

இ[வை](து)மறியாதி தேவன் எழுத்து.

இ[வை](து)செல்வாக்கு(த்)தேவர் எழுத்து.

இவையறிவோம்.

(கு-பு.)—

இதுவும் முன்சொன்ன கோவிலிலுள்ளது. வீரமுக்கணித் தேவரென்பவர், மஹாதேவர் திருப்பணிக்கும், திருநைமித்தியத்திக்கும் ஒன்றேகால் நிலம் தானமாக விட்டதைத் தெரிவிப்பது. குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு கக-வதில் இது எழுந்தது.

(*y*) திருவேதிகுடிக்கோயில் சாசனம்.

TIRUVĒDIKUḌIKKŌYIL ŚĀSANAM.

Foll. 37*b*—38*a*.

A copy of an inscription in stone in Tiruvēdikuḍi temple dated the 13th year in the reign of Rājarājadēvar. They relate to the grant of certain pieces of land to the said temple by a body of six persons for the due perforamance of the Pūsam festival to God Mahādēva therein.

Beginning:

கசகூ-வது.

ஸ்வஸ்திஶ்ரீ (ரா)சராசதேவர்க்கு யாண்டு கஙு-ஆவது வீறை(க்)கூற்றத்து(?)த் திருவேதிகுடி மஹாதேவர்க்கு இந்நாட்டு உடையார் இக்கோயில் மஹாதேவர்க்கு விற்பணியால் இந்நாட்டு உடைய நா(யனு)ர் கோயிலுக்குவிட்டது பூசத்திருநாளுக்கு நிலமாகவிட்டது வீரமாங்குடி உடையார் கோலால் நிலம் மூன்று வேலியும் இந்நாட்டு மஹாதேவர்க்கு விட்டோம்.

End:

இப்படிக்கு,,(ராச)ராச தேவரால் கூடியிருந்து தானமாக நீர்வார்த்துக் [கு](கொ)டுத்தோம்.

இப்படிக்கு:—
இ[வை](து) குலசேகர நாதன் எழுத்து.
,, பிரமாதாயன் ,,
,, செல்வாக்குத் தேவன் ,,
,, வறியாதரிதன் ,,
,, சோழவதரையன் ,,
,, சோலேக்கண்ணன் ,,

இ[வை](து) எல்லோர்களுமறிவோம்; இப்படியால் சொல்வோம்.

(கு-பு.)—

இதுவும் மூன்சொன்ன கோவிலிலுள்ளதே. மஹாதேவர்க்குப் பூசத்திருநாளுக்காக வீரமாங்குடி உடையார் கோலால் மூன்றுவேலி நிலத்தைக் குலசேகரநாதன் முதலிய அறுவரும் விட்ட விவரத்தைத் தெரிவிப்பது. ராசராசதேவர்க்கு யர்ண்டு 13-வதில் இச்சாசனம் வெட்டப்பட்டது.

---

(௭) திருவேதிகுடிக்கோயில் சாசனம்.

TIRUVĒDIKUḌIKKŌYIL ŚĀSANAM.

Foll. 38*a*—39*a*.

A copy of an inscription dated Monday the 13th day of the bright fortnight of the Āni month in the 21st year of Kulaśēkaradēvar relating to the grant of land for the due performance of certain services to God Mahādēva of Tiruvēdikudi.

Beginning:

கருo-வது.

ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவன சக்கர[விரு](வர்)த்திகள் வீராபிஷேகமும் விசயாபிஷேகமும் கொண்டருளிய ஶ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு உக-ஆவது மிதுன நாயிற்றுப் பூருவபட்சத்துத் திரயோதசியும் பூசத்து நாளும் திங்கட்கிழமையும் பெற்ற இந்நாளில் பாண்டிய குலாசனி வளநாட்டு(த்) திருவேதிகுடி மஹாதேவர்க்கு அபிஷேகார்ச்சனைக்கு விட்டது.

End :

திருவிட்டலேக்கு மேற்கு, வியா . . . . . : குவழிக்கு வடக்கு, வடசாத்தனூருக்குக் கிழக்கு, பூஞ்சோலைக் கெல்லைக்கு(த்)தெற்கு, இந்நான் கெல்லைக்குட்பட்ட நிலமாவது பதி(ன்)மூன்று வேலியும் இவ்வூர் மஹாதேவர்க்குத் தாராதத்தமாக நீர்வார்த்துக்[கு](கொ)டுத்தோம்.

இப்படிக்கு,
இ[வை](து)திருவாழத் தேவர் எழுத்து.
,, வீரமுக்கணி தேவர் எழுத்து.

இந்த எழுத்துப்படிக்கு இந்தத் தர்மத்தை யாதாமொருவ[ன்](ர்) பரிபாலனம் பண்ணுகிறபேர்கள் [ெ]கங்கைக் கரையிற் காராம்பசுவைத் தானம் பண்ணின புண்ணியத்தைப் பெறுவார்கள். இந்தத் தர்மத்துக்கு யாதாமொருவ[ன்](ர்) விகாதம் பண்ணுகிறபேர்கள் [ெ]கங்கைக்கரையில் காராம்பசுவைக்கொன்ற தோஷத்திற்போவார்கள்.

(கு-பு.)—

இதவும் மேற்சொன்ன கோவிலிலுள்ளதே. மஹாதேவர்க்கு அபிஷேகார்ச்சனைக்காக, பதின்மூன்றுவேலியைத் தானமாகத் திருவாழத்தேவரும், வீரமுக்கணித் தேவரும் விட்ட விவரத்தைவிளக்குவது. வீராபிஷேகமும், விசயாபிஷேகமும் கொண்டருளிய குலசேகர தேவர்க்கு 21-வது யாண்டு ஆனிமீ பூருவபட்சத் திரயோதசியும் பூசநட்சத்திரமுங் கூடிய திங்கட்கிழமை இச்சாசனம் எழுந்தது.

(a/1) திருவேதிகுடிக்கோயில் சாசனம்.

TIRUVĒDIKUḌIKKŌYIL ŚASANAM.

Foll. 39a—39a.

A copy of an inscription in Tiruvēḍikuḍi temple relating to the grant of land for the upkeep of the charity of lighting with ghee both day and night lamps in the shrine of God Mahādēva therein.

Date of the inscription :—11th year in the reign of Gōrāsakēśari.

Beginning :

கடுக-வது.

ஸ்வஸ்திஸ்ரீ கோராச கேசரி பன்மர்க்கு யாண்டு கக-ஆவது இக் கடலூர் திருவேதி குடி மஹாதேவர்க்கு எறிவதற்கு விளக்கெறிய இந்நாட்டு உடையான் திருமாழத் தேவன் இக்கோயில் மகாதேவர்க்குப் பகல் (இ)ராத்திரி எறிய நெய்விளக்கு இரண்டுக்கும் உடையார் நிலம் (இ)ரண்டு வேலி தானமாக நீர்வார்த்துக்[கு](கொ)டுத்தோம்.

End :

இக்கோயில் இந்நாயனர் பாதபூசை திரு(மா)ழ(த்தே)வன்(னை)க[ய்]யி[க்]கு] (ற்கொ)டுத்தோம்.

இவையறிவோம் :—
இப்படிக்கு,
இ[வை](து) மழவராயன் எழுத்து.

(கு-பு.)—

இதுவும் முன்சொன்ன இடத்துள்ளதே. ஷை கோவிலில் இரவும் பகலும் எரியும் நெய்விளக்குத் தருமத்துக்காக 2 வேலி நிலம் மழவராயன் என்பவரால் தானமாக விடப்பட்ட விவரத்தைத் தெரிவிப்பது. கோராசகேசரிப்பன்மர்க்குப் பதினோராவது ஆண்டில் எழுதப்பட்டது.

(a/2) திருவேதிகுடிக்கோயில் சாசனம்.

TIRUVĒDIKUḌIKKŌYIL ŚĀSANAM.

Foll. 39*a*—39*b*.

A copy of an inscription in the temple of Tiruvēdikuḍi relating to the grant of a piece of land for the due performance of a particular festival therein.

Date of inscription:—32nd year in the reign of Kulōttuṅgasōḻan.

Beginning:

கருஉ-வது.

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கர[விரு] (வர்)த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு முப்பத்திரண்டாவது திருவேதிகுடி மஹாதேவர்க்கு இந்நாட்டு உடையார் இவ்வூர் இக்கோயில் இந்நாட்டு உடையாருக்கு விருஷபவாகனத்திருநாளுக்கு விட்ட நிலமாவது

End:

வி(டை)டயாற் கெல்லையில் நிலம் இரண்டு வேலி ; இந்நிலம் இரண்டு வேலியும் இக்கோயில் மஹாதேவருக்குத் தானமாக விட்டேன்.

இந்தத் தர்மத்துக்கு யாதொருவ[ன்](ர்) விகாதம் பண்ணுகிறபேர்கள் கோகத்திபண்ணின தோஷத்தில் போவா[ன்](ர்).

இப்படிக்கு,
இவையறிவோம்.

(கு-பு.)—

இதுவும் திருவேதிகுடிக் கோவிலிலுள்ள சாசனம் ஒன்றின் நகல். ஷை ஊர் ஈசுவரனுடைய விருஷபவாகனத்திருநாளுக்கு அவ்வூர்ச் சபையார் இரண்டு வேலி நிலம் விட்ட விவரத்தைத் தெரிவிப்பது. குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு முப்பத்திரண்டாவதில் இச்சாசனம் எழுதப்பட்டது.

R. No. 342.

Paper. 11 × 9½ inches. Foll 27. Lines, 20 in a page. Grantha and Tamil. Good.

Transcribed in 1916-17 from a palm-leaf MS. of M.R.Ry. Gopalacāriyar of Villiyambakkam, Chingleput district.

சித்தாந்தசாரகர்மஸ்வரூபம்.

SIDDHĀNTASĀRAKARMASVARŪPAM.

A treatise explaining according to Jainism the nature and characteristics of the Karman as well as the manner in which it operates

on souls. In the beginning the different worlds of the Jains as well as their religious teachers, Tīrthaṅkaras, Cakravartins, Baladēvars, etc., are referred to and fuller details regarding them, it is stated, are to be found in such treatises as Trilōkasāram, Trilōkaprajñapti, Jambūdvīpa-prajñapti, Dvīpasāraprajñapti and Lōkaṇi.

Complete.

Beginning :-

லோகஸ்வரூபம்.

லோகம் த்விவிதம்; நிச்சயலோகம், வ்யவஹாரலோகம். தத்ர நிச்சய லோகமென்பது ஷட் த்ரவ்ய பரிபூரணமாகும். [வ்யவஹார லோக மென்பது அனந்தாகாச அனந்தானந்த ப்ரதேசத்ததாகிய ஆகாசமத் தியத்துள் அகிர்த்திரிமமாகிய அநாதி ஸித்தமாகிய கனோததி வலய கனவாத தனுவாத மென்னும் வாதத் திரயங்களால் பரிவேஷ்டிதமாகி அதியில் வேத் ராஸன ஜல்லரீ ம்ருதங்க ஸம்ஸ்தான ஸ்வரூபமான ஆத்யந்த அவஸானங்களையுடை த்தாகி நாளிகா தத்வாஹ்ய ஹேதுத்ததாகி தக்ஷிணோத்தர வ்யாஸம் ஆதி அந்த்ய அவஸான ஸப்தரஜ்ஜுவ ப்ரமாணத்ததாகி (. . . . .) முந்நூற்று நாற்பத்துமூன்று குழி பிரமாணத்ததாகி அகிர்த்திரிமமான ஸ்ருஷ்டி லோகமென்று ஹேதுமுடையதாகிய வ்யவஹார லோகமென்பதாகும்.

(* * * *)

இந்த பரதக்ஷேத்திரத்தில் வ்ருஷபஸ்வாமி முதலாகிய தீர்த்தங்கரர் இருபத்து நால்வரும், (ப-ர)ஜமதஸகர முதலாகிய சக்கரவர்த்திகள் பன்னிருவரும் விஜயர் முதலாகிய பலதேவர் ஒன்பதின்மரும் த்ரிவிஷ்டன் முதலாகிய வாஸுதேவர் ஒன்பதின்மரும் அச்வக்ரீவர் முதலாகிய பிரதி வாசுதேவர் ஒன்பதின்மரும் ஆக ஐந்துவகைப்பட்ட அறுபத்துமூவர் சலாகா புருஷ [ரி](ருடை)ட(ய) சரிதங்களும், நவநாரதர்கள் ஏகாதசருத்திரர் சரிதங் களையும் முன் சொல்லப்பட்ட மஹாமேரு முதலாகிய வகைகளுக்கு க்ஷேத் திரப்பிரமாண அளவுகளும் அந்த க்ஷேத்திரத்திருக்கிற ஜீவன்களுக்குச் சரீ ர அளவும் ஆயுஷ்யப் பிரமாணங்களும் ஆஹார வி(யவ)காரங்களும் மற்றும் நாநாவித ஸ்வரூபங்களையுடையதாகும்; இவற்றினுடைய விஸ்தாரம் த்ரி லோகஸார, த்ரிலோக பிரஜ்ஞப்தி, ஜம்பூத்வீப பிரஜ்ஞப்தி, த்வீபஸார பிரஜ் ஞப்தி, லோகாணி முதலாகிய சாஸ்திரங்களிற் கண்டு கொள்ளவும்.

(* * * *)

அந்தக் கர்மங்களுடைய நாமங்களும் தத்தம் குணங்களும் அதினாலே உண்டாக்கப்பட்ட ஸ்வரூப(ெ)மல்லாம் ஸம்க்ஷேபத்தினால் சொல்லுது(ம்); அ(ஃ)தெப்படியெனில் ஜ்ஞானாவரணீயம், தர்சனாவரணீயம், வேதநீயம் மோஹநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என மூல கர்ம ப்ரக்ருதிகளும் அ.

உத்தரப்ரக்ருதி கர்மங்களாவன் :—முன்ஜ்ஞானாவரணீய கர்மத்தில் [ம திதமா] ஜநிதமாகிய மதிஜ்ஞானாவரணீயம் ச்ருதஜ்ஞானாவரணீயம்

அவதிஜ்ஞானாவரணீயம் மந: பர்யயஜ்ஞான கேவலஜ்ஞானாவரணீயம் ஆக ஜ்ஞானாவரணீயம் ௫.

(* * * *)

அந்தராய காமமாவது தானாந்தராயம், லாபாந்தராயம், போகாந்தராயம், உபபோகாந்தராயம், வீர்யாந்தராயம் ஆக அந்தராயம்—௫.

ஆக மூலப்ரக்ருதி கர்மம் எட்டுக்கும் உத்தரப்ரக்ருதிகள்—௧௪௮.

End:

" 𑌦𑍇𑌵𑌪𑍂𑌜𑌾 𑌗𑍁𑌰𑍂𑌪𑌾𑌸𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌂𑌯𑌮𑌸𑍍𑌤𑌪𑌃 ।
𑌦𑌾𑌨𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑌿𑌨𑍇 𑌦𑌿𑌨𑍇 ॥ "

என்றும் ஸாமயிகஸ்தவநம் வந்தநம் ப்ரதிக்ரமணப்ரத்யாக்யாநகாயோத்ஸர்க்கமெனஷடாவஶ்யகங்களும். அவற்றுள் தேவபூசை யென்பது அஷ்டாதசதோஷரகிதனாகிய தேவனை பூஜைபண்ணுவது. அஷ்டாதச தோஷங்களாவன :—பசி, தாகம், பயம், ராகம், த்வேஷம், மோகம், சிந்தை, ஜரை, ரோகம், மரணம், வேர்ப்பு, இளைப்பு, மதம், பிரியம், ஆச்சர்யம், ஜனனம், நித்திரை, விஷாதம், ஆக-௧௮ (. . . . . . .) சுபபரிணாமம் நீங்கிச் சுத்த பாவத்தினின்றும் மோட்ச மெவ்வண்ணமாமெனில் திருஷ்டாந்தம் சொல்லுதும் :—ஒரு ஆற்றுக்கால் ஏரி ஒரு ஸமயத்தில் மேலே நீர்வரவு கீழே மதகினாலே ஜலம் போவதும் நடுவே நிலைகொண்டிருப்பதும் போல ஜீவன்களுக்குக் கர்மபந்தமும் உதயமும் ஸத்வமும் என்னேரமு மிடைவிடாமல் நடக்கிறது. அந்த யேரிமேலே வருகிற நீரைக்கட்டிக் கீழே போகிற மதகைத் தாழப்பிடிங்கிவிட்டு நடுப்பட்ட நீரை இறைத்துவிட்டா லெப்படி போமோ அப்படிபோல ஜீவன்களுக்குச் சுத்த பாவத்தினால் ஸம்வரையென்றும் நிர்ஜ்ஜரையென்றும் மோக்ஷமென்றும் மூன்று விதமாகும்.

அவற்றுள், ஸம்வரை யென்பது ஏரி வாய்க்காலைக் கட்டுவதுபோலே ஜீவன்களுக்கு ஆத்மபாவனை என்று சுத்தபாவத்தினால் வருகிற கர்மங்களைத் தடுப்பதாகும்.

நிர்ஜ்ஜரை யென்பது அவ்வேரிமதகைத்தாழ பிடுங்கிவிட்டதுபோல தபச்சரணாதிகளால் கர்மத்தைப் போக்குவதாகும்.

மோக்ஷமெனபது அவ்வேரி(யி)லே பள்ளத்துள் நடுப்பட்ட நீரை இறைத்துப்போட்டதுபோல சில ஜீவன்கள் ஔதாரிகதைஜஸகார்மணமென்னும் சரீரத்திரயத்தைக் கெடுத்து எரண்ட பீஜம்போல மோக்ஷத்தை யெய்துவதாகும். (. . . . . . .) அவவண்ணமாகிய யோகத்தினை வென்று ஸமஸ்த சில குணங்களினாற் பரமோக்ஷத்தை யெய்தின பரமாத்மன் பதினாலாம் குணஸ்தானவர்த்தி அயோகி கேவலியாம், அந்தப் பரமேஷ்டியிடத்து நிச்சய ரத்ன த்ரயமாகக் காரண ஸ்வயஸாரமாகிய பரமயதாக்யாத சாரித்ரம் சம்பூர்ணம் ஆகுமென்றறிவது.

Colophon:

ஸித்தாந்தஸார கர்மஸ்வரூபம் முடிந்தது.

ஸ்ரீரஸ்து.

The scribe adds :

விசுவாவசுவூ ஆடிமீ 22வ ஆதிவாரம் வந்தவாசி தாலூகா கூடலூர் சந்திர ஸாகரஸ்வாமி ஸித்தாந்தஸார கர்ம ஸ்வரூபம் எழுதி நிறைந்தது.

(கு-பு.)—

இது ஜைனமதத்தினர் கூறும் கர்மம் இன்னின்ன என்பதையும், அவைகள் இத்துணைப் பகுப்புடையன என்பது முதலியவற்றையும் விரிவாக விளக்கிக் கூறுவது. இந்நூலை இயற்றியவர் பெயர், காலம் முதலியன ஒரு வகையாலும் விளங்கவில்லை. ஆயினும் திரிலோக சாரம், திரிலோகப்ரஜ்ஞப்தி, ஜம்பூத்வீப ப்ரஜ்ஞப்தி, த்வீபசார ப்ரஜ்ஞப்தி, லோகாணி முதலிய ஜைன நூல்களுக்கு இந்நூல் காலத்தால் பிற்பட்டதென்று தெரிகிறது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமுள்ளது.

R. No. 343.

Paper. 10½ × 9½ inches. Foll. 193. Lines, 20 in a page. Tamil. Good. Restored in 1917-18 from a MS. of the Library.

(*a*) பாண்டியதேசவரலாறு.

PĀṆḌIYADĒŚAVARALĀṞU.

Foll. 1*a*—124*b* and 129*a*-193*a*. Fol. 193*b* is left blank.

Gives some of the incidents that happened during the time of certain Pāṇḍiya kings as well as the events that took place in Madura which was for a long time the capital of that ancient kingdom.

Complete.

Beginning :

பாண்டியதேச வரலாறும் பாண்டிய ராசாக்கள் சரித்திரமும்.

இந்தப் புஸ்தகம் பாண்டிய மண்டலத்தை ஆளப்பட்ட பாண்டிய மகாராசாக்களுடைய சரித்திர கதை. அந்தப் பாண்டி மகாராசா கதையில் மூ[ண்](ன்று)வது பொஸ்தகம். ஆக-௩.

இந்தப் பொஸ்தகத்தில் பாண்டிய மகராசாக்கள் கதை அஞ்சு கதைகள்.

அதின் பிறகு முன்னாலே ஆலாசிய நாயகர் ஸ்ரீகைலாசத்திலே வட ஆல விருட்சத்தின் கீழே தெட்சிணாமூர்த்தி மூ[கூ]ர்த்தத்தைத் தரித்துக்கொண்[டியி](டி)ருந்து அரிபிரமாதி தேவர்கள் யோகிகளுடனே கூடிக்கொண்டிருக்கப்பட்ட பிரமத கணங்களுக்கும் தேவதைகளுக்கும் அஷ்ட மஹாசித்தி வித்தைகளை உபதேசிக்கிற சமயத்தில் [ெ]யட்சாளுடைய [சிறீ](ஸ்திரீ)கள் ஆறு பெயர்கள் அஷ்ட மகாசித்தி அயிசுவரிய சம்பன்னனாயிருக்கிற சிவனிடத்தில் வந்து சாஷ்டாங்கமாகிற தெண்டப் பிரணாமம் செய்து எழுந்திருச்சு சந்நிதானத்தில் நின்றுகொண்டு விநய பயபத்தியுட்னே தோத்திரஞ் செய்

தார்கள். (. . . . . .) அந்த [செ]யட்சஸ்திரீகள் ஆறு பெயர்களும் தங்களுக்கு இந்த வித்தையை உபதேசிக்கச் சொல்லி விண்ணப்பஞ் செய்தார்கள். 'அதற்குத் தட்சிணாமூர்த்தி சுவாமி சொன்னது என்னவென்றால், நீங்கள் பராசத்தியான சர்வாவரண சத்தப்பிரம சொரூபிணியான தேவியை மனசிலே தியானம்பண்ணி அந்தத் தேவியினுடைய மந்திரத்தை நீங்கள் செவிச்சீர்களானால் உங்களுக்கு அணிமாதியட்டயிசுவரிய வித்தையானது சித்திக்கும். ஞாதரு, ஞானஞேய வற்[ச்]சிதமான திரிபுடி ரகிதமான நிர் விசேஷ பிரம வித்தையானது உங்களுக்குப் பிராத்தியாகும்; அதினாலே உங்களுக்குச் சீவன் மு[கு]த்தி வி[வத](தக) முத்திபலன் உண்டாகும்.

(* * * *)

தெட்சிணாமூர்த்திக்குத் தயவுவந்து அந்தப் பாண்டிய மண்டலத்துக்கு ராசதானியான மதுராபுரி பட்டணத்தின் சமீபத்தில் இருக்கப்பட்ட பட்டமங்கை என்கிற கிராமத்தில் நீங்கள் ஆயிரம் வருஷம் ஒரு ஆல விருட்சத்தின் கீழே கல்லுகளாய் இருந்த பிற்பாடு ஆலாசிய நாதரான சொக்கலிங்கமான நான் குரு ரூபத்தை தரிச்சு உங்களுடைய சாபத்தை விமோசனம் பண்ணிவைத்து உங்களுக்கு அஷ்டமகாசித்தி வித்தையை உபதேசிக்கிறேனென்று சொன்ன பிற்பாடு.

End:

நக்கீரகவியானவர் கபில கவியானவர் பரணகவியானவர் இவர்(க)ள் மூன்றுபேரும் தாம் செய்த பிரபந்தங்களைப் படித்துக் கேட்பித்தார்கள். இந்தப் பிரபந்தமான மூன்று பிரபந்தத்தைக் கேட்டவுடனே அவருக்குச் சரீரத்திலே ரோமாஞ்சமான மயிர்க்கூச்சவிட்டது. கண்ணிலேயும் ஆனந்த பாஷ்பமான கண்ணீர் பெருகிற்று. இதைச் சங்க கவீசுவராள் நாற்பத்தெட்டு(ப்) பேரும் பார்த்து இந்த மூன்றுபேருடைய மூன்று பிரபந்தமும் உத்தமமென்று எல்லாரும் அங்கீகரித்துக் கொண்டார்கள். குறை நாற்பத்தைஞ்சு பேர்களுடைய நாற்பத்தஞ்சு பிரபந்தங்களும் அயோக்கியமென்று அதர்மமென்று தள்ளிப்போட்டார்கள். அப்போது இந்தக் கவீசுவராள் ஒருவருக்கொருவர் மாற்சரியம் பொறாமை இல்லாமல் அந்நியோன்னியமாய் ஒருவருக்கொருவர் மயித்திரியம் உண்டாய் (. . . . .) அப்புறம் அகத்தியர் சொன்ன தமிழ் நூலான திராவிட சூத்திரமும் அதற்கு வியாக்கியானமான உரையானது நக்கீரகவி, பரணகவி, கபிலகவி செய்தது உலகத்தில் சிஷ்ய பரம்பரையாய் விருத்தியடைஞ்சது.

Colophon:

கதை முற்றும். பாண்டியதேச வரலாறும் பாண்டிய தேசராஜாக்கள் சரித்திரமும் முற்றும்.

(கு-பு.)—

இது பாண்டிய மன்னர் பலருடைய வரலாறுகளையும், மதுரையில் நடந்த பல சரித்திரங்களையும் கூறுவது. பரஞ்சோதி முனிவர் முதலியவர்கள்செய்த திருவிளையாடற் புராணங்களை மூலமாக வைத்துக்கொண்டு இச்சரித்திரத்தை வசன நடையில் இயற்றியிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. தாழ்ந்த நடையாலாயது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுப்பெற்றிருக்கிறது.

(b) காவேரியாற்றுக்கல்லணை.

KĀVĒRIYĀṞṞUKKALLAṆAI.

Foll. 125*a*—126*b*.

Herein the year of the birth of Karikālaśōlan, the duration of his reign and the year when he constructed a stone dam across the river Kāvēri are given. Six stanzas at the end are written in support of these facts.

Complete.

Beginning:

கல்லணை கட்டினது பராந்தகசோழ மகாராசாவினுடைய குமாரன் கரிகாலசோழ மகாராசா அவர்கள் கட்டினது. அது யெப்போவென்னில் கலியுகம் பிறந்து கூாகூ௰ தொள்ளாயிரத்துத் தொண்ணூரும் வருஷத்தில் கரிகால சோழ மகாராசா பிரந்தது. அவருக்கு ௫-ம் அஞ்சாம் வருஷத்தில் பட்டம் கட்டினார்கள். அதன் பிரகு பொன்னியாறு கரைகண்டான் ௫௰௩-அம்பத்து மூணும் வருஷம் காவேரி கரைகண்டு கல்லணையான அணை(க்) கட்டை(க்) கட்டினான்.

End:

இதற்கு, கல்லணை கட்டச்சே சொன்ன வெண்பாவும், அந்த கரிகால சோழராசா கலியுகத்தில் பிறந்த பிரமாணத்துக்கும், அவர் ராச்சியபாரம் பண்ணின வருஷத்துக்கு பிரமாணமும் அதுக்கு ஆதரவு அவர் நாளையிலே சொன்ன வெண்பாவும் எழுதியிருக்கிறது.

வெண்பா.

தொக்க(க)லியின்[து] (தொ)ளாயிரத்துத் தொண்ணூறில்
மிக்க கரிகால வேந்துதித்த(ப்)—பக்கம்
அலைக்குந் திரைப்பொன்னி யாறுகரை கண்டான்
மலைக்குநே ரானபுய மன். (௧)

(* * * *)

வலசை பதினாறு வல்வடுகு நாலு
சிலைநான்கு பேடொன்று சென்றதற்பின்
கொத்தவனும் பட்டு வயலத்தஞ்ச மானகரும் (?)
அந்தணனே ஆளும் அரசு. (௬)

(த-பு.)—

இதில் கரிகால் சோழனென்பவன் பட்டத்துக்கு வந்தகாலமும், அவன் இருந்து அரசாண்ட வருஷம் இத்தனையென்பதும், அவன் காவேரியாற்றுக்கு ஒரு கல்லணை கட்டுவித்த விவரமும் கூறப்பட்டுள்ளன. இவ்வரலாறு எழுதப்பட்ட காலம், எழுதினோர் பெயர் முதலியன விளங்கவில்லை.

(c) செயங்கொண்டசோழபுர வரதராசப்பெருமாள்கோயில் சாசனம்.

JAYAṄKOṆḌAŚŌLAPURA VARADARĀJAPPERUMĀḶ KŌYIL ŚĀSANAM.

Foll. 126b–127b.

இப்பதார்த்தமாவது: தத்பதமே அது; துவம்பதமே நீ; அசிபதமே ஆனாய்.

ஆகப்பதார்த்தம் கூட்டவே அது நீயானாய் என்றது; எப்படி? அதுவென்றசத்தம் சிவம் நீ என்ற சத்தம் சீவன் ஆனாயென்ற சத்தம் சிவசீவ ஐக்கியம் என்றாயிற்று.

பகவானே! சிவமாவது யார்? சீவனாவதேது? இவையிரண்டின் ஐக்கியமாவதெப்படி? என்று கேட்ட சீடனுக்குப் பரமாசாரியன் அனுக்கிரகம் பண்ணும்படி :—

சீவாத்மா நீதான்; சிவமாவது நாம்; உனக்கு நம்மைத் தெரியாதபடி மறைத்ததே பாசம்.

End:

இப்படி அனுபோக சித்தாந்த கைவல்லிய சித்தியிலே யாதாமொருவர் ஒரு நிமிடமாகிலும், ஒரு கண்சிமிட்டுகிறபோதாகிலும், ஒரு நொடியாகிலும், பசுவின்முலைப்பீர் விழும்போதாகிலும், சொபா[ப](வ)த்தைக் கண்டுளோர்கள் சத்தியம்! சத்தியம்!! புனச்சென்மமில்லை என்றும், அதிவர்ணாச்சிரமியென்றும், ஏகரேசனென்றும் பழமறைகளும் திரிமூர்த்திகளும் துதிசெயக் கடவோனுமவனென்றேயறிக.

“அறிவாயறியாமை நீங்குமவனே பே
ரறிவாயொழித் தெங்குந்தானான போத
னறிவாமவற்றினுட்டானான போதஞ்
செறிவாகி நின்றவன் சீவனுமாமே”

"எல்லாமறிவ தறிவுதனைவிட்டே
யெல்லாமறிந்து மிலாபமங் கொன்றில்லை
யெல்லாமறிந்த விறைவனை நானெனனி
லெல்லாமறிந்தவிறை யென்னலாமே."
"துரிய மிருந்தநற் சொல்லுறும்பரனை
யரிய பரம்பர மென்பர்க ளந்தக
ரரிய பரம்பர மன்றது திக்கும்
அருநில மென்பதை யாரறிவாரே."

Colophon:

திருமந்திரப் பிரமாணம.
வேதாந்த[ப]பத்ததி.

(கு-பு.)—

இது சைவவேதாந்த விஷயமானது. இதில் தத்வமஸி வாக்யத்தின்பொருள்களும் பெருமையும் நன்குவிளக்கப்பட்டுள்ளன. வசன நடையாலாயது. இயற்றியவர்பெயர் முதலியன விளங்கவில்லை.

(b) சாதனசதுட்டயம்.
ŚĀDANACATUṬṬAYAM.

Foll. 6a—13a.

This is also a treatise on Advaita Vēdānta, The four fold necessary spiritual attainments for the realization of Brahman are explained. Incidentally the different kinds of instruments of knowledge and certain states of consciousness, etc , are also explained herein

Complete.

Beginning:

நித்தியா[வனி](நி)த்தியவஸ்துவிவேகம், இகாமுத்திரார்த்தபலபோக விராகம் சமாதிஷட்கசம்பத்தி முமுட்சுத்துவம். ஆக ௪.

இதில், நித்தியா[வனி](நி)த்தியவஸ்துவிவேகமாவன :—

பிரமமே நித்தியம்; மற்றுள்ளவெல்லாம் அ[னு](நி)த்தியம் என்று திடப்படுத்தல்.

இகாமுத்திரார்த்தபலபோகவிராகமாவன :—

இகலோகத்திலேயுள்ள வீடு, மாடு, ஆள், அடிமை முதலானபோகமும், பரலோகத்திலேயுள்ள அட்சரத்திரியமுதாதி போகங்களிலும், அதினாலே, வருகிற துன்பங்களையும் பலகால் நினைத்து அதிலே நரகம்போல வெறுப்பு வருவன.

சமாதிஷட்கசம்பத்தியாவன :—சமம், தமம், உபரதி, திதிட்சை, சமாதானம், சிரத்தை, ஆக ௬.

சமமாவன :—சிரவணமனனாதிக்கன்னியமாயிருக்கிற பிரபஞ்சவியாபாரங்களிலும் போகாமல் அந்தக்கரணத்தை திறுத்துதல்.

(* * * *)

சிரத்தையாவன :—அதிகாமுகனுக்குப் பெண்பித்தும் பிடித்தா(ற்)போலச் சிரவண மனனாதிகளிலும், குருதேவதாசாத்திரவாக்கியங்களிலும் தட்டுதலற வதினாலே வருகிற சேதங்களையுங் கணியாமற் சந்தோஷத்துடனே பரிபாலனம் பண்ணுதல்.

ஆகச் சமாதியாறுஞ் சொல்லப்பட்டது.

End:

பிரமாணமென்பது பிரத்தியட்சம் அனுமானம் உபமானம் சத்தமென்றும் தர்க்கத்துக்கு ச—விதமாயிருக்கும்; வேதாந்திகளுக்கு அர்த்தாபத்தி அபாவம் என்றும் சு - விதமாக இருக்கும்; புராணிகர்க்கு ஐதிகத்துடனே கூடப் பிரமாணம் எழாக இருக்கும். (. . . . .)

இனி, ஐதிகப்பிரமாணமாவன :—லோகத்தார்வழக்கம்; அஃதேதென்னில் இந்தமரத்திலே பேயுண்டென்று நிர்ணயிக்கிறது (. . . . . . .)

மேலாலவத்தை நாலும் மோட்சத்தைக் கொடுக்கும்; இதிற் கீழாலவத்தையாவன :—அஞ்ஞானம், ஆபரணம், விட்சேபம் ஆக ௩. (. . . . .) அதுவே சீவன் முத்தியென்றுந்தடையற்ற ஆனந்தாபரண நிவர்த்தி என்றுஞ் சொல்லப்பட்டது; இப்படிமேலாலவத்தை நாலுஞ் சொல்லப்பட்டது.

சாதனசதுட்டய முற்றும்.

(கு-பு.)—

இது அத்வைதமத ஸம்பந்தமானது. அவர்கள் கூறும் நித்யாநித்திய வஸ்துவிவேகம், இகாமுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதி ஷட்கசம்பத்தி, முமுட்சுத்துவம் என்னும் ஸாதனசதுஷ்டயங்களின் இலக்கணங்களையும், அனுமானம், உபமானம், சத்தம், அர்த்தாபத்தி, அபாவம், ஐதிகம் முதலிய பிரமாணலட்சணங்களையும், மேலாலவத்தை, கீழாலவத்தைகளின் இலக்கணங்களையும், பாமரர், கன்மிகள், உபாசகர்களாகிய அஞ்ஞானிகளின் பிரிவுகளையும், சத்தாபரணம், சித்தாபரணம், ஆனந்தாபரணம் முதலியவற்றின் பிரிவுகளையும், விட்சேப இலக்கணமுதலியவற்றையும் கூறுவது. வசனநடையாலாயது. முற்றும் இருக்கிறது.

(c) தற்காட்சிமுப்பத்தாறுக்குவகை.

TARKĀṬSIMUPPATTĀṞUKKU VAHAI.

Foll. 13a—15b.

A treatise explaining the 36 Tattvās or fundamental principles connected with self-realization.

Incomplete.

Beginning:

தற்காட்சிமுப்பத்தாறுக்குவகை.

விராட்டுவுக்குத் தூலபூதத்திற்குக்கடினை, திராவணி, தெகனை, வெகினி, அவகாசினி, ஆக ரு.

தூல பவுதிகத்துக்கு சுகடினை, சுதிராவணி, சுதேகனை, சுவேகினி, சுசுவகாசினி, ஆக ரு. ஆகப்பூதபௌதிகமாயை பத்துக்கும்விராட்டென்றுபேர்.

மாயாப் பிருதிவிமயாக்கு தாதா விசுவதிற்கு அசா பிரசாபதி, சதுமுகன் ரு.

தாதா—க, விசுவதிற்கு - க, சுசா - க, பிரசாபதி - க, சதுமுகன் - க, ஆக - ரு.

ஆகப்பத்தும் வயிசுவானரரென்றுபேர்.

விராட்டுக்கும், வயிசுவானரர்க்கும் அதிட்டான தற்சாட்சியாக இருக்கிற சைதன்னியம் பிரமா; இரணியகர்ப்பத்துக்குச் சூட்சுமபூதம் நந்தை, பத்திரை, சுரபி. சுசீலை, சுமுனை, ஆக ரு.

End:

பஞ்சப்பிராணனுக்கு வகை. வியானன்: ஆகாசாங்கிசம், சர்வமும் இருப்பன், தெய்வம் விசுவயோனி.

பிராணன் வாயுவின் காரியம்; சுவாசநிசுவாசம் செய்யும்; தெய்வம் வசிட்டன்.

அபானன்: அக்கினியம்சம், அன்னத்தைச் சரிப்பிக்கும், விசுவகர்த்தா.

சமானன்: அப்புவினங்கிசம், அன்னரசம் சரீரத்தில் (ப) ரப்பும், தெய்வம் அசெயம்.

உதானன்: பிருதிவியங்கிசம், கண்டத்திலே நின்று பிராணன் போகிற மூர்ச்சையிலே கடைவன்; அதிதேவதை அசன். ஆகப்பஞ்சப்பிராணனஞ்சும் அறியவும்.

(கு-பு.)—

இது தத்துவங்கள் முப்பத்தாறின்வகை முதலியவற்றை விளங்கக்கூறுவது. இயற்றியவர்பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுப்பெறவில்லை யென்று தோன்றுகிறது.

R. No. 362.

Paper. 10¾ × 9½ inches. Foll. 19. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918–19 from a MS. acquired through M.R.Ry, Mahāmahōpādhyāya V. Swāminathaiyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

திருவாவடுதுறைமரபட்டவணை.
TIRUVĀVAḌUTṞAIMARAPAṬṬAVAṆAI.

Explains the leading principles of the Śaiva Siddhānta as inculcated by the pontiffs of the Tiruvāvaḍuturai Mutt in the form of similitudes and objections raised and answered. The name of the author is not known.

Complete.

Beginning:

"ஏகனனேகனிருள்கருமமாயையிரண்டாகவியையாதியில்". ஏகனென்பது கர்த்தா; அனேகனென்பது ஆத்மா; இருளென்பது ஆணவமலம்; கருமமென்பது புண்ணியபாவமாகிய கருமமலம்.

மாயையிரண்டென்பது சுத்தமாயை அசுத்தமாயையுமாம். இவையாறு பொருளுமொருகாலத்திலேயுள்ளவல்ல; அனுதியிலே நித்தியமாயழியாததாயிருக்கும்.

ஏகனுகிய கர்த்தாவுக்கு எண்ணிறந்த தன்னியல்பு குணமுண்டு; அதில் இரண்டு குணஞ் சொல்லுகிறேம்; அஃதேதென்னில், ஒருவருமறிவியாமற்றனேயறிகிற குணமொன்று; ஆத்துமாக்களுக்கு அறிவிக்கிற குணமொன்று. ஆக உ.

இதற்கு வசனம், சித்தியாரில் ௫-ல் "அறிதருசிவனே யெல்லாமறிந்தறிவித்து நிற்பன்" என்றது காண்க.

அனேகனுகிய ஆத்மாவுக்கு எண்ணிறந்த தன்னியல்புக்குணமுண்டு; அதில் இரண்டு குணஞ்சொல்லுகிறேம்:—

அறிவித்தாலறிகிற குணமொன்று; பிறருக்கு அறிவிக்கமாட்டாத குணமொன்று ஆக உ.

இதற்குச் சிவஞானபோதம் அ-ல், "அறிவித்தாலன்றி யறியாவுளங்கள்" எ-ம், சித்தியில், "அறிந்திடுமறிவனன்றும்" எ-ம் வருவதுகாண்க.

End:

ஆத்மாவுக்கு எல்லாவற்றிற்கு முந்தினது பக்குவம்; அதற்குப் பிந்தினது சிவபுண்ணியம்; அதற்குப் பிந்தினது மலபரிபாகம்; அதற்குப் பிந்தினது சத்திநிபாதம்; அதற்குப் பிந்தினது இருவினையொப்பு; அதற்குப் பிந்தினது ஆசாரியர் திருமேனிகொண்டெழுந்தருளிவருதல், அங்குத்தியனுக்கிரகம் பண்ணப்பட்டதின்ற ஞானசாத்திரம்; இது மோட்சமடையும் முறைமையெனவறிக்.

Colophon:

மரபட்டவணைமுற்றும்.

(கு-பு.)—

இது திருவாவடுதுறை மடத்தார் கூறும் சைவசித்தாந்தத்தின் முடிந்த பொருளைத் தடைவிடைகளானும், உவமை முகத்தானும் விளக்குவது. வசனநடையாலாயது. இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப்பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 363.

Paper. 11 × 9¾ inches. Foll. 33. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1917—18 from a MS. acquired through M. R. Ry. Mahamahopadhyāya V. Swaminātha Ayyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

சித்தாந்தப்பஃறொடை.
SIDDHĀNTAPPAHRODAI.

This work is considered to be one of the Paṇḍāraśāstirams. Herein the author Ambalavāṇadēśikar brings out the principles of

Śaivasiddānta as taught to him by his Guru Namaccivāyadēśikar of Tiruvāvaduturai and thus extolls his greatness. This work does not appear to have been printed.

Complete.

Beginning :

செய்யாப் பணிபலவுஞ் செய்வேன் றிருவுளத்திற்
செய்யும் பணிசிறிதுஞ் செய்தறியே—னுய்யுநெறி
யெத்தால் வருமடியார்க் கின்பா வடுதுறைக்கு
ளத்தா நமச்சிவா யா.

திருவாரு ஞானத் திலதத்தா னீற்றான்
மருவாரு மேனி வளத்தா—னொருவாத
கண்டிகை சென்னி களங்காது மார்புகரங்
கொண்டிலங்கு மேனிக் குறியுடையான்—மிண்டிலங்கப்
பேதித்த மும்மலமாம் பெற்றியெனு முப்புரத்தைச்
சேதித்த பொல்லாச் சிறுநகையான்—சாதித்த
காமமெனு மாரன் கனவோ டெரிந்துவிழச்
சேம விழிதிறந்த சித்தத்தான்—பூமிசையிற்
றோற்றமிறப் பென்னுஞ் சொலுங்காலன் மாய்ந்துவிழ
மாற்றுந் திருவடியால் வாட்டினோன்—கூற்றமெனு
மாணவமுஞ் சஞ்சிதமு மற்றுவிழ நோக்களித்தும்
பூணுங் கருணைநெறிப் பொற்பினான்—வீணவமா
மாயை மயக்க மடிய மலர்க்கரத்தை
நேயமுடன் சென்னிவைத்த நேயத்தான்—காயமுட
னோங்கு பொருளு முறுமுயிரு மொன்றாக
வாங்குங் கருணை மதியுடையா—னீங்காத

End : அண்டர்தொழும்

வேதா ரணியத்தின் மெய்கண்ட சந்ததிக்கோர்
ஞாதா வெனப்பேரு நண்ணியே—யோதா
துணர்ந்தார்க் குலவாக் கிழிவழங்கி யொப்பின்
மணந்தான் பசுக்குலத்தை மாற்றிப்—புணர்ந்த
திருவா வடுதுறைவாழ் தேசிகனு மென்னே
வொருவாத் தொழிற்பெயரு முற்றே
(*   *   *   *)

எல்லோரும்

நண்போ டுரைத்திடவே நன்னமச்சி வாயனெனப்
பண்போ டியர்நாமம் பற்றியே. (. . . . .)
வேடமும் பூசையுமே மெய்யென்றான் பொய்யென்றான்
மாடையும் வாழ்க்கை மனையையுமே—நீடியதோர்
நெஞ்சுவிடு தூதி னிகழ்த்துமுப தேசமுறு
வஞ்சகரை நெஞ்சின் மருவனென்பாள்
(*   *   *   *)

முத்திநிலை

சொற்ற சிவஞான போதத்தைச் சூழாம
லற்றவர்க்கே பொய்க்கடவு ளாகுமென்பாள்
(* * * *)

பூவி
லுயர்ந்தமணம் போல வொழியாம னின்ற
நயந்த கருணை நலம்போற்றி—யியைந்த
குருவடிவைப் போற்றிக் குலாவிமற் றென்று
மருவறியே னென்ன மதித்தாள்.

ஆகத் தறிவை யகற்றியவ் வாவியினு
ளேகத் தனுவை யுறவைத்துத்—தேக
வறிவாக்கி மங்கையரு ளாணுண்மற் றென்றைப்
பிறிவாக்குந் தேசிகனைப் பெற்று.

Colophon:

காயத் தருதவருட் கன்னி யடியிணையைத்
தோயத் தொடர்ந்தாண்ட. . . . . தேவரு—மாயத்தான்
றய்யாபுன் சொல்லாற் றொடுத்தேன் புனைந்தாளென்
னையா நமச்சிவாயா.

சித்தாந்த மென்னத் தெரிந்த பஃறொடையிற்
சத்தாந்த முந்நூற்றெண் பத்தஞ்சாய்—முத்தாந்தஞ்
சொன்னான் றிருவா வடுதுறையைச் சூழ்ந்தார்க்கு
மன்னாகு மம்பலவாணன்.

சித்தாந்தப்பஃறொடை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் சைவசித்தாந்தத்தைச் சார்ந்த பண்டாரசாத்திரங்களுள் ஒன்று. திருவாவடுதுறை நமச்சிவாய தேசிகர்மீது அவர் சிஷ்யருள் ஒருவராகிய அம்பலவாண தேசிகர் இயற்றியது. இதில் நமச்சிவாயதேசிகர் தமக்கு உபதேசித்த சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இன்னவெனக்கூறி அவரது பெருமைகளை விளக்குகிறார். கலிவெண்பாவாலாகியது. இன்னும் அச்சிடப்படவில்லை. இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

R. No. 364.

Paper. 11 × 9¾ inches. Foll. 45. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918-19 from a MS. acquired through M. R. Ry. Mahāmahōpādhyāya V. Swaminatha Ayyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

சிவானுபோகத்திரட்டு.
ŚIVĀNUBŌGATTIRAṬṬU.

A collection of stanzas relating to Śaivasiddānta culled out from different works the names of which are given at the end of the extract

The collection contains 305 stanzas and is subdivided into 63 sections or chapters, the names of which will be found given in the Tamil remarks below.

Complete.

Beginning:

பாயிரம்.

தந்தை தாயுமெய்த் தகவுடையுறவுஞ் சாலுங்கல்வியுந்
தகுமுயிர்த்துணையுஞ்
சிந்தையாருநற் சீலமும்வலியுந்
திருவுமின்பமுஞ் சிதைவிலாவறிவு
முந்தை யாமுளத் துவகையு முயிரு
மூலமுத்தியு மொழிவருஞ் சமைவு
மெந்தையாகிவந் தேழையேனையுமா
ளிறைவனார்கழ லாகுமென்றனக்கே.

ஆதியாயனாதியாகி யந்தமாயனந்தமாகிச்
சோதியா யிருளு மாகித் தொந்தமாய்த் தொந்தமில்லா
நீதியாய் நினைவதாகி நினைவரி தென்று வேத
மோதிய பரமானந்த வொளியினை யுளத்தில் வைப்பாம்.

(* * * *)

ஓங்குமுயிர்க ளொருநான்கு மூணரும்வண்ண முணராமற்
பாங்கினுலகமுழுதினையு மறைத்தபடலப் பெருமாயை
யாங்கு வேரோ டழியும்வ[ண்]ண மகமும் புறமு முறநீனந்து
தீங்கி லின்பத் திகழொளியாஞ் சிவப்பிர காசத் தினைப்பணிவாம் (க)

திரட்டு.

End:

மங்கலவாழ்த்து.

மன்னர்கோல்மனு வி(ன்)னெறியிற்புக மழைபொழிந் துலகெல்லா
மன்னநீடுக வருணவம் பெருகுக வாண்டவன் கழல்சூடிப்
பின்னமாகிய பேதைமை நீங்குக பேருலகிது வன்றே
யென்னையாளுடை யிறையருட் சொரூபனை யானிரந்தது தானே (க)

(* * * *)

அஞ்செழுத்தும் வாழி (வாழி)யருணைவாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம் வாழி கருணைவாழி கருணைபோன்
மஞ்சுபெற்ற வானம்வாழி வையம் வாழி வையமேற்
றஞ்சமுற்ற நீறுவாழி சைவம்வாழி வாழியே (ஙு)

Colophon:

ஆக ௩௦ரு.

சிவானுபோகத்திரட்டு முற்றும்.

(கு-பு.)—

இது சைவமத விஷயமானது.

(1) கடவுள் வாழ்த்து.
(2) அருளிறைவணக்கம்.
(3) பஞ்சாக்கரதரிசனம்.
(4) அட்டாக்கரம்.
(5) தீர்த்தசங்கற்பம்.
(6) விபூதி.
(7) சிவஞான பூசை.
(8) சைவம்.
(9) சிவயோக தாரணை.
(10) சிவ வேடம்.
(11) வேதச் சிறப்பு.
(12) ஆகமச் சிறப்பு.
(13) அறிஞருரைச் சிறப்பு.
(14) கற்றோரொடுக்கம்.
(15) துறவி வயிராக்கியம்.
(16) ஞானி மான்மியம்.
(17) ஞானி சீலம்.
(18) ஞானி யிலக்கணம்.
(19) ஞானி பூசைச் சிறப்பு.
(20) ஞானியை யிகழ்ந்தோர் கேடு.
(21) ஞானி காய மழிவு.
(22) தன்பக்கமறிந்தோருபதேசம்.
(23) வன்ணாச்சிரமம்.
(24) பிரமசரியம்.
(25) அதிவன்ணாச்சிரமம்.
(26) அனாசாரம்.
(27) நிலையாமை.
(28) சமுசாரபோகநிந்தை.
(29) சாதி சங்கற்பம்.
(30) பிரபஞ்சோற்பத்தி.
(31) நிர்விகார சமாதி.
(32) தியானம்.
(33) தத்துவநிச்சயம்.
(34) ஞானபலன்.
(35) ஞானாசாரம்.
(36) சன்மார்க்கம்.
(37) பிராரத்தம்.
(38) முத்திசாதனம்.
(39) மோட்ச சித்தி.
(40) ஆசாரியாரிலக்கணம்.
(41) அனாசாரியாரிலக்கணம்.
(42) பக்குவரிலக்கணம்.
(43) அபக்குவக்குறி.
(44) சீடாசாரம்.
(45) சம்பிரதாய விலக்கணம்.
(46) முப்பாய்விவரம்.
(47) இறைவலிநோக்கிமகிழ்தல்
(48) இறைதிருவிளையாடல்.
(49) இறைமொழியாட்சி.
(50) சமயசங்கற்பம்.
(51) கழிந்தநாட்கிரங்கல்.
(52) ஆட்சியருமைகூறல்.
(53) அனுபூதிவியப்பு.
(54) உபசாந்தம்.
(55) பெறுதற்கிரங்கல்.
(56) பரதரிசனம்.
(57) சாக்கிராதீதம்.
(58) துரியசாமீபந்தன்னையறிதல்.
(59) அதீததரிசனம்.
(60) அதீதானுபோகம்.
(61) அருட்டிறம்வினாவல்.
(62) அருட்டுதி.
(63) மங்கலவாழ்த்து.

என்னும் 63 பிரிவுகளோடுகூடிய 305 பாடல்களை உடையது.

இப்பாடல்கள் கீழ்வரும் நூல்களினின்று தொகுக்கப்பெற்றவை. தொகுத்தவர்பெயர் முதலியன விளங்கவில்லை. நூல்கள் :—

(1) அசத்ஞானதரிசனம்.
(2) அஞ்ஞவதைப்பரணி.
(3) அஞ்ஞானநிவிர்த்தி.
(4) அப்பர்.
(5) அவிரோதபோதம்.
(6) அனுபவசூரியன்.
(7) ஆலாசியம்.
(8) ஆனந்தநிலயம்.

(9) ஆனந்தபோதம்.
(10) இடைக்காடர்.
(11) எறுதிநாயனுர்.
(12) கந்தனலங்காரம்.
(13) கருவூர்நயினுர்.
(14) குறுந்திரட்டு.
(15) சமயாசாரம்.
(16) சித்தாந்த தீபிகை.
(17) சிதம்பரபுராணம்.
(18) சிவஞானதரிசனம்.
(19) சிவஞானநிலயம்.
(20) சிவதருமோத்தரம்.
(21) சிவப்பிரகாசதரிசனம்.
(22) சிவப்பிரகாசநிலயம்.
(23) சிவப்பிரகாசப் பெருந்திரட்டு.
(24) சிவப்பிரகாசம்.
(25) சிவவாக்கியம்.
(26) சிவானந்தநிலயம்.
(27) சிவானந்தமாலை.
(28) சிற்றம்பலநாடியார்.
(29) சுந்தரமூர்த்திகள்.
(30) சுவானுபவசித்தி.
(31) சொரூபானந்தசித்தி.
(32) ஞானசாரம்.
(33) ஞானசித்தி.
(34) ஞானதீபம்.
(35) ஞானநிலயம்.
(36) ஞானப்பரணி.
(37) ஞானவாசிட்டம்.
(38) ஞானனந்தசித்தி.
(39) தத்துவசரிதை.
(40) தத்துவசித்தி.
(41) தத்துவதரிசனம்.
(42) தத்துவதீபிகை.
(43) தத்துவப்பிரசித்தி.
(44) தத்துவரத்னகரம்.
(45) தத்துவரத்னவலி.
(46) தத்துவாமிர்தம்.
(47) திட்டாந்தமாலை.
(48) திருஞானசாகரம்.
(49) திருப்பாட்டு.
(50) திருமந்திரமாலை.
(51) திருமொழி.
(52) திருவருட்பயன்.
(53) திருவாசகம்.
(54) திருவாய்மொழி.
(55) திருவிசைப்பா.
(56) திருவுந்தியார்.
(57) தேவாரம்.
(58) தோன்றி.(?)
(59) நிசானுபவசித்தி.
(60) நித்தியானந்தசரிதை.
(61) பகவற்கீதை.
(62) பட்டினத்தார்.
(63) பரமஞானவிளக்கம்.
(64) பெருந்திரட்டு.
(65) போதரத்நாகரம்.
(66) போதாமிர்தம்.
(67) மும்மணிக்கோவை.
(68) மூலசித்தி.
(69) மெய்ஞ்ஞானநிலயம்.
(70) மெய்ஞ்ஞானவிளக்கம்.
(71) மெய்ம்மொழிச்சரிதை.
(72) வாகீசர்.
(73) வீட்டுநெறிப்பால்.

R. No. 365.

Paper. 11 × 9½ inches. Foll. 13. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918–19 from a MS. acquired through M.R.Ry. Mahāmahōpādhyāya V. Swaminatha Ayyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

(*a*) சிதம்பரவிலாசம்.

CIDAMBARAVILĀSAM.

Foll. 1*a*—4*b*.

Describes the holiness of Cidambaram as well as the greatness of the different portions of the temple of God Śiva worshipped under the name of Naṭarājar therein. The name of the author is not given.

Complete.

Beginning :

நித்ந்தொறும் புலிமுனி பதஞ்சலி போற்றிய
சிதம்பரவிலாச விதந்தனை மொழிந்திடக்
கரமலர் நான்கொடுத் தரமுக மாகிய
நரமுக கணபதி திருவடி பணிகுவாம்.

திருத்தகு மாளிகை பொருப்பெனத் திகழ்தரு
தொல்லை யாகிய தில்லை மூதூ
ராகவு மாசிவ லோகம் பூமிசை
யருட்டிரு நகரா யுதித்து விராட்டுவி
னிதயக் கமலத் துதய மாயின
மாநக ரதனில் ஞானமங் குரித்துச்
சச்சிதா னந்த சிற்சபை யாகிய
யிரவுபக லற்ற பரமரக சியத்திற்
காரண மாகிய வாரண நான்குந்
தோரண கம்பத் தூணதாய் விளங்கின
சுருதி நான்கினுக் கருகுதென் புலத்து
மங்கள மாகிய வங்கமோ ராறு
மூன் று கோணமுந் தோன் றவிரு பாலு
மறுதூணுக நிறுவி யமைந்தன
மிக்கவங் கத்தின் பக்க மாகவும்
பேதக மிலாத பூதமோ ரைந்துந்
தம்பமைந் தாகவும் பம்ப வமைந்தன
மொய்ம்புற நிறுவிய வைம்பூ தத்தின்
பாங்கர்தென் புலத்து வீங்கிய பெருமை
வழுவிலா கமங்க ளெழுநிலை யாகவும்

(* * * *)

தாவில் பெருமைச் சத்தியொன் பதின்மருந்
தூவி களாகத் துலங்க விருந்தன
வருக்கமைந் தாகிய திருக்களிற் றுப்படி
யடியினி னகரமு மதன்மேன் மகரமு
நடுவினிற் சிகரமு நான்கினில் வகரமும்
யகர முடிவா மைம்பதக் கரமும்
பஞ்சாக் கரத்திருப் படியென வமைந்தன.

End:

பச்சிம வாய்தலிற் செச்சை யணிபுய
௩௨. னமரர்சிறை மீட்ட குமர நாயகன்
சுடர்விடு கதிர்வேற் கடவு ளிருப்ப
னளப்பரும் பெருமையின் மகத்துவ மாகிய
தில்லை மாநக ரெல்லை காண்கினு[ம்]
[யெள்ப்](மெட்) பொழுதாகிலு மு[ள்ப்](ட்)பட நினையினு
௩௪. நேச மாக[வு நா](வி௲)வினும் பேசினுஞ்
சிதம்பர மென்றசொற் செவியினிற் கேட்பினு
மிறையிலைக் கொடுக்கும் பிறவிசா கரக்
கருவடி யறுத்துத் திருவடித் தாமரை
நீழலில் வாழ்வது நிச்சயந் தானே.

(கு-பு.)—

இது சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராசப்பெருமான் கோயிலின் அமைப்பையும், அவ்வூரின் மகிமையையும் தெரிவிப்பது. அக்கோவிலில் வேதங்கள் 4, அங்கங்கள் 6, பூதங்கள் 5, புராணங்கள் 18, கம்பங்களாகுமென்றும், தத்துவங்கள் - 96 - ம் துவாரங்களாகுமென்றும், புவனங்கள் - 224-ம் பலகைகளாகுமென்றும், சுவாசங்கள் 21,600-ம் தாம்பிர ஓடுகளாகுமென்றும், நரம்புகள் 72,000 ம் ஆணிகளாகுமென்றும், அக்கரங்கள் ருக-ம் பொற்றகடாகுமென்றும், சத்திகள் கூ-ம் ஸ்தூபிகளாகுமென்றும், பஞ்சாக்கரம் திருக்களிற்றுப்படியாகுமென்றும் இதில் விளங்கக்கூறப்பெற்றுளது. அகவற்பாவாலாயது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. முற்றும் இருக்கிறது.

(b) அவத்தாதரிசனம்.

AVATTADARIŚANAM.

Foll. 5*a*—10*a*.

On the different kinds and conditions of consciousness. The name of the author is not given.

Complete.

Beginning:

அவத்தைகள் இருபத்துநான்கு; அவையாவன:—பிரேரகாவத்தை - க; மத்தியாலவத்தை - ரு; கீழாலவத்தை - ரு; மேலாலவத்தை - ரு; சகலாவத்தை - க; கேவலாவத்தை - க; சுத்தாவத்தை - க; நின்மலாவத்தை - ரு; ஆக உச.

இதில் பிரேரகாவத்தையாவன:—சிவதத்துவம் - ரு, கலாதி - எ, கரணங்கள் - சு, பொறிகளிற் சோத்திரம் - க, பூதங்களிலாகாசம் - க; ஆக கஅ கருவிகூடிச் சத்தத்தைக் கேட்கிற அவதரம். மற்ற இந்திரியத்திலும் இப்படிக் கண்டு கொள்க.

மத்தியாலவத்தையாவன:—சாக்கிரத்தி லதீதம், சாக்கிரத்திற்றுரியம், சாக்கிரத்திற் சுழுத்தி, சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சாக்கிரம், ஆக ரு.

சாக்கிரத்திலதீதமாவது :—முன்பு கண்டவனை இப்பொழுது அறியாமல் நிற்பது.

துரியமாவது :—புருடதத்துவத்துடனே பிராணவாயுவுங்கூடி யறியுமா போலே யறிந்தும் அறியாமலுமிருப்பது.

End :

நின்மல சாக்கிரத்துக்குக் கருவிகளைந்தாவன :—உலக வெறுப்பு - க, ஆசாரியன் பற்று - க, உபதேச நட்பு - க, மலமெங்கே போகிறதென்று பார்ப்பது க, கருத்து நிற்பது - க, ஆக ரு.

சொப்பனத்துக்கு :—மனமெங்கே போகிறதென்று பார்ப்பது - க, கருத்து நிற்பது - க, அருட்பிரகாசம் - க, ஓட்டற நிற்பது - க, ஆக ச.

சுழுத்திக்கு :—கருத்து நிற்பது - க, அருட்பிரகாசம் - க, சுதந்தாவீனம் - க, ஆக ங.

துரியத்துக்கு :—அருட்பிரகாசம் - க, இன்ப சத்தி - க, ஆக உ.

அதீதத்துக்கு :—பேரின்பமொன்றுமே யெங்கை.

இடம் :—இதயம் கண்டம் புருவமத்தி பிரமரந்திரம் துவாதசாந்தம்.

(கு-பு.)—

இது அவத்தைகள் இருபத்துநான்கின் இலக்கண முதலியவற்றை விளங்கவுரைப்பது. முற்றும் இருக்கிறது. இயற்றியவர் வரலாறொன்றும் தெரியவில்லை.

(c) அளவையட்டவணை.

ALAVAIYAṬṬAVAṆAI.

Foll. 10*a*—13*b*.

Gives the nature and the various divisions of the leading instruments of knowledge such as Pratyakṣa, Anumāna, Upamāna, Sabda, etc. This work is in prose and the name of the author is not given.

Complete.

Beginning :

அளவைப் பிரமாணமாவது :—பிரத்தியட்சம், அனுமானம், சத்தம், அபாவம், அர்த்தாபத்தி, உவமானம், ஆக சு.

பாரிசேஷம் சம்பவம் ஐதிகம் சகசம் ஆக - ச; ஆக - க0.

இவைக்கு மேலுமளவைகளுள ; அவைசொல்லாம் பிரத்தியட்சம் அனுமானம் சத்தமென்கிற மூன்றிலுமடங்கும்.

பிரத்தியட்சமாவது :—ஐயக்காட்சி திரிவுகாட்சி சவ்விகற்பக்காட்சி நிருவிகற்பக்காட்சி இந்திரியக்காட்சி மானதக்காட்சி தனவேதனைகாட்சி யோகக்காட்சி என்று எட்டு விதமாக இருக்கும் ; இதில்,

ஐயக்காட்சி :—குற்றியோ மகனோ சிப்பியோ வெள்ளியோ பாம்போ பழுதையோ ஆணோ பெண்ணோ சினையோ பாலோ இவைபோலப் பலவு முள.

திரிவு காட்சி :—குற்றியை மகனென்றல் மகனைக் குற்றியென்றல்; இப்படி மற்றவையுங்கொள்க.

End :

சகச வேதுவாவது :—ஒரு சொற்குப் பலபொருளிருந்தால் வினை சார்பு இனம் இடமுதலானவைகளிலே பல பொருளையும் விட்டு ஒரு பொருளிலே துணிதல்; அஃதெப்படி யென்னில் :—“ மாப் பூத்தது ”, “ மாவீழ் நொச்சி ”, “ மாவும் நாயும் வளர்ந்தன ”, “ மாமறுத்த மார்பன் ” என்பனபோல.

(* * * *)

அளவைகளினுலறியப்படும் பொருள் - ௩ வகைப்படும்; அது கூட்டப்பொருள் தோப்பு, பொதுப்பொருள் மாமரங்கள்; சிறப்புப்பொருள் தேமாவென்று நிற்பது தன்னியல்பு; அந்நிய சாதியாகிய தோப்பை நீக்கிப் பொதுவாகிய மாமரங்களென்று நிற்பது பொதுவியல்பெனக் கொள்க. (. . . . . . .)

எட்டுமிரண்டும் எத்தனையென்று கேட்டால் ஒன்பதென்று சொன்னவனை இப்படி என்சொன்னுயென்று கேட்டால் நானுருடனே சொன்னேனென்று சொல்லுகை தோல்வித்தானம்; இது இருபத்திரண்டு வகைப்படும்.

இன்னம் பலவாய்ச் சொல்லுவாரு முளர்.

Colophon :

அளவை முற்றும்.

(கு-பு.)—

இது பிரத்தியட்சம், அனுமானம், சாப்தம் முதலிய அளவைகளின் இலக்கணங்களையும் அவற்றின் பிரிவுகளையும் விளங்கக்கூறுவது. வசன நடையாலாயது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 366.

Paper. $10\frac{3}{4} \times 9\frac{3}{4}$ inches. Foll. 110. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1917-18 from a MS. of the Library.

மலையாளதேசத்து ஜாதிகளின் வரலாறு முதலியன.

MALAYĀḶA DĒSATTU JĀTIKAḶINVARAḶĀṞU MUDALIYANA.

Gives a sketch of the different sects of people in the Malayaḷam country as well as certain details of information relating to some specific places in that country. Fuller particulars are given in the Tamil remarks below.

Incomplete.

Beginning :

கவளப்பாரை நாட்டில், திருக்கன்கோடு தேவஸ்தானம் . . . . . . மறுபாட்டம் என்று சொல்லப்பட்ட பிரமாணம் எழுதின ஓலைகள் கொண்டு வந்ததில் சச. ஒ(ண்ணு)(ன்று)க்கு நக்கல் எழுதினது :—

கொல்லம் . . . . . கூ அய்உ-ஆவது தனு வியாழம் கன்னிஞாயத்தி . . . . எழுதிய உபயம் மாட்டொலக் கறணமாவது . . . . . எழுதது கொறுசங்கரனும் தம்பிமாரும் கையால் நடயத்தை . . . . கறுணங்களுக்கு பின்பு . . . . ஈ-க-புதுப்பணம் கொண்டான்

End :

வடசேரி மன்னாடி அம்சூத . . . . . . பரைவித்து வாயி பூமிக்கிஜன . . . . ஸ்ரீ . . . . க ஒட்டைகைமேல் திரவியம் கொண்டுவந்தது . . . .

மதுகரைக்கு யிங்கொட்டு . . . . . வாளயாருக்கு யிங்கொட்டு . . .

(* * * *)

மலயாளம், பாலக்காட்டுத்தாலுகில் வடசேரி மன்னாடிமார் என்குறவன் யிடத்து கிறந்தவரி நக்கல் . . . . நெடுங்கன்னாடு, வள்ளுவநாடு தாலுகில் அகப்பட்ட காஞ்சூர நம்பூரிப்பாட்டு யிடத்தில் யிருந்த . . . . அடிப்பெத்தோலைக்கு . . . . நக்கல் பின்னையும் அகப்பட்ட சாசன நக்கல் களும் கூடி

* * * *

(கு-பு.)—

இது மலையாள தேச சம்பந்தமானது. இதில் (1) மலையாளதேசத்துப் பல ஜாதியாரின் வரலாறு, (2) திருக்கன்கோடு (திருக்கொணங்கோடு) கோவிலைப்பற்றிய சிலவரலாறுகள். (3) கவளப்பாரைநாட்டு திலவருமான விவரம், (Revenue account), (4) கவளப்பாரைநாட்டு ஜமீந்தார் கவளப்பாரை நாயரின் வம்சாவளி. (5) கள்ளிக்கோட்டை ஸமஸ்தானம் ஸேனாதிபதியினிடமிருந்த, ஷை சமஸ்தான சம்பந்தமான சில ரிகார்டுகளின் காப்பி, (6) மலையாளதேச அமைப்பு ஸம்பந்தமான சில வரலாறுகள் (Geographical account), (7) நடுவட்டம் நாடு ஸம்பந்தமான சில ரிகார்டுகளின் காபி, (8) வடசேரி மன்னாடியாரிடமிருந்த, புதச்சேரி என்ற ஊர்ஸம்பந்தமான மலையாளம் ரிகார்டுகளின் காபி. (9) திருவந்துர்ச்சத்திரம் கோயில் ஸம்பந்தமான சில வரலாறுகள், ஆகிய இவை அடங்கியுள்ளன. பிரதி அபூர்த்தி.

R. No. 367.

Paper. 11 × 9½ inches. Foll 13. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1918-19 from a MS. in the Library.

உபதேசப்பஃறொடை.
UPADEŚAPPAHRODAI.

This is a copy made from the MS. described under No. 1232 of the D.C.T. MSS., Vol. III.

Complete

(கு-பு.)—

இது டிஸ்க்ரிப்டிவ் காட்லாக் 1232-ஆம் நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப் பெற்றது. முற்றும் இருக்கிறது.

R. No. 368.

Paper. 10¾ × 9½ inches. Foll. 25. Lines, 20 in page. Tamil. Good.

Restored in 1918–19 from a MS. in the Library.

பாப்பையபிள்ளையுலாமடல்.
PĀPPAIYAPILḺAIYULĀMAḌAL.

A short poem describing eulogistically the liberality, bravery and other good qualities of Pāppaiya Piḻḻai, the chief man of Ambainagar and a patron of Tamil scholars. He is also stated to have been a contemporary of the French Governor Dupleix and arranged to carry out the conduct of worship, festivals and certain other services such as repairs, etc., in the Śaiva temples in Vaitīśvarankōyil, Cidambaram, Kānci, Aṇṇāmalai, Kāḻahatti (Kalahasti), and Madura.

Incomplete.

Beginning:

"வேகமாநெறி (. . . . .) போற்றுவாம்.'

பாராளு மம்பைநகர்ப் பாப்பையபூ பாலன்மே
லாராய்ந் துலாமடலன் பாயுரைக்கத்—தாராருஞ்
சித்தந்தி வண்ணனருள் சித்திவே ழுத்தைநெஞ்சே
தித்தந்தி யானஞ்செய் நீ.

மகராச பாப்பைய பிள்ளையவர்கள்பேரில் உலாமடல்.

மணிகொண்ட வாவிதிகழ் மாமதுரை வாழும்
பணிகொண்ட வேணிப் பரனு—மணிகொண்ட
சீதரனு நான்முகனுந் தேவேந் திரனுமுகிற்
கோதையிர திக்குரிய கோமானு - மாதவளத்
திங்களுமோ ராழியந்தேர்ச் செங்கதிருந் திண்டிறலார்
புங்கவரு மேலாந்த போதனரும் - வங்கமிகு

காராழி ஞாலமுமெக் காலமுநீங் காமலுளப்
பேராசை கொள்ளவந்த பெண்ணமுதஞ் - சீராக
(* * * *)
சங்கின்மே லோர்முளரி தான்பலபூக் கொண்டிருந்தா
லங்கதற்கொப் பாகுமெழி லான்னத்தாள் - பொங்குபுகழ்ப்
பாப்பைய பூபாலன் பரவுவயித் தீசரங்க
நாப்பணில கும்பிறைபோ னன்னுதலாள் - (. . . . .)
பாராண் மகராச பாப்பையபூ பாலமுகிற்
சேராரைப் போற்றேய்ந்த சிற்றிடையாள் (. . . . .)
மாதுவரை நண்ணுதலால் மன்னெ . . . . . . மேவுதலாற
போதிலகுங் கங்கை பொருந்துதலாற்—சீதமிகு
மிந்தீ வரத்தையென்று மெய்துதலா விப்புவியி
னந்தாமற் கற்றவரை நண்ணுதலாற் - கந்தாருஞ்
சாதுரிய வேழந் தனையுரித்தாந் தன்மையினு
னுதனெப்பாங் காம்பீலி நாட்டினன் - சோதிமிகும்
வானகமான் மேவுதலால் மாசந்தா னஞ்சேரு
மேனலத்தா லம்பகமெய் மேவுதலாற் - முனிதமு
மிப்பாரு மேதுதிக்க விந்திரனுக் கெஞ்ஞான்று
மொப்பாம் பெருமுளசை யூரினன் (. . . . . . .)
மங்கைபங்கர் வேளூர் வைத்தியநா தப்புனிதர்
செங்கமலத் தாள்வணங்குஞ் சென்னியினன்
(* * * *)
பண்டெண்ணெண் கோத்திரமும் பாங்காறு சூத்திரமுங்
கொண்ட கருணீக குலத்தினன் - தண்டமிழ்சொல்
வாழ்கீர்த்தி யார்கபில மாமுனிதன் கோத்திரத்தான்
சூழ்காத்தி யாயனநற் சூத்திரத்தான் - தாழ்சடையார்
வத்துவையின் னம்பூர்வாழ் வள்ளலேமுன் னன்பாக
வத்தகனு கப்படைத்த வம்புயவேள்

End :

மன்னவரும் வந்து வணங்குமலர்த் தாட்புதுவைத்
தென்னன் பிராஞ்சுமன்னர் தீரனிகற் - கொன்னுனைவேற்
செண்டிருவகு வாண தொறதிப்பிலே செனுந்துரையு
மண்டலமே போற்று மதாமுமகிழ் - கொண்டரசர்
(* * * *)
தரணிபுகழ் வேளூர்த் தலைவ ரருளாற்
பரணிகொளும் வெற்றி படைத்தோன் - முரணிலாப்
புள்ளிருக்கு வேளூர்ப் புனிதருக்குந் தென்புலியூர்
வள்ளலுக்குங் காசியிலு மாபதிக்கும் - வெள்ளைவிடைக்
கச்சியே கம்பருக்குங் காளத்தி நாதருக்கு
மெச்சுதமிழ்க் கூடலெங்கள் வித்தகற்கும் - நச்சரவந்
துன்று சடாமகுடச் சோணசயி லர்க்குமிசை
யொன்றுஞ் சிவத்தலங்க ளுள்ளதற்கு - மென்றுமிகும்
பூசைவிழா நல்வளங்கள் பூணுந் திருப்பணியு
தேச முடனடத்து நீதிபரன் (. . . . . .)

அள்ளிலே வேற் கை[ய]வே ளலங்கார பூபதியைப்
பிள்ளையெனப் பெற்ற பிரபலவான் - றெள்ளுதமிழ்
மீறுங் கருணிக்கர் மெய்க்குலமு மேன்மையாய்க்
கூறும் பதஞ்சலியார் கோத்திரமுந் - தேறுதிராகி
யாயநற் சூத்திரமு மன்பாக வேபடைத்த
து(யவேங்கடா)சலமாந் துங்கமுகில் - நேயமுடன்
தந்தபர மேசமங்கை தான்வாழ வாழுமெங்கள்
சுந்தர ராச சுமுகனையு - மைந்தருவா
ரிந்திர னுக் கொப்பா யிருநிலத்தை யாளவந்த
சந்திர சேகரனுந் தன்மனையுங் - கொந்தலர்தார்த்
தென்மருவுந் தெய்வ சிகாமணிபூ பாலனையு
நன்மருக னென்றழைக்கு நாகரிகன் (. . . . .)
பார்த்திபனே ராய்ப்புவியாள் பாப்பையவேள் - சீர்த்திருவார்
வேலன் பெருமுளசை வீரனலங் காரமுகில்
பாலன் மகராச பாப்பையவே - ளேலவுந்தா
னண்பன் வினைதீர்த்த நாதரிரு தாள்பணியும்
பண்பன் மகராச பாப்பையவேள் (. . . . . .)
வாரமட றன்னிலவா வன்தண்மை நீக்கியெழி
லாரமட மான்வடிவெல் வாமெழுதி - வீரசஎட
பின்னியிசை வாயிலங்கப் பேரெழுமிச்சம்ப . . . .

* * * *

(கு-பு.)—

அம்பைநகர்ப் பாப்பையபிள்ளை என்பவர்மீது, அவருடைய கொடை, தீரம் முதலிய குணவிசேடங்களைப் புகழ்ந்து பாடப்பெற்றதிச்சிறுநூல். இவர் புதுச்சேரியிற் பிரஞ்சுக்காரருக்குச் சேனாதிபதியாக விளங்கிய டியூப்ளே மதாம் முதலியவர்கள் காலத்தவரென்றும், வைத்தீசுவரன்கோயில், சிதம்பரம், காஞ்சி, அண்ணாமலை, காளத்தி, மதுரை முதலிய சிவ தலங்களிற் பூசை திருவிழா திருப்பணி முதலியவற்றைச் செவ்வன் நடைபெறும்படி செய்வித்தவரென்றும், தமிழ்வித்வான்களுக்கு விரும்பின பொருள்களை மிகுதியாக உதவியவரென்றும், அம்பை நகருக்குத் தலைவரென்றும் இந்நூலால் தெரிகின்றது. இவ்வுலாவை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. நூலின் இறுதிப்பாகம் இல்லை.

R. No. 369.

Paper. 11 × 9¾ inches. Foll. 75. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918-19 from a MS. acquired through M.R.Ry. Mahāmahōpādhyāya V. Swaminatha Ayyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

தத்துவப்பிரகாசம்.
TATTUVAPPIRAKĀŚAM.

A treatise explaining, in accordance with the Śivañanabōda, a work on Śaivasiddhānta, the nature of Pati, Paśu, Pāśa, also the Caryā

(conduct,) Kriyā (rituals), Yōga (meditation) and Ñāna (wisdom) and the doctrines of the Śiddhāntam as well as of the other systems. The purport of the 12 Sūtras of the Śivañānabōdam are clearly brought out in 338 stanzas of this work. The author is Tattuvaprakāśar, disciple of Ciṟṟambalanāḍigaḷ of Sīkāḷi.

Complete.

Beginning:—

பரையீன்ற தனியொளியே வடிவாய் ஞானம்
    பகரிச்சை கிரியையுமும் மதமாய்ப் பண்டை
(?) வரையீன்ற வைங்கை நால்வாய
    வளர்முக்க ணிருசெவியோர் வலிய கோட்டு
திரையீன்ற கிம்புரிக்கும் பக்க ளிற்றை
    நெஞ்சகத்தின் வஞ்சகத்தைத் தவிர்ந்து நாளு
முரையீன்ற சொல்லினல் விரையீன்ற மலரா
    லுரைத்தருச்சிப் பவர்வினையின் வருத்தமறுப்பவரே. (க)

(* * * *)

சாற்றியசொற் றவறுதறன் சொற்சாதியாதே
    சாற்றினே னிலையென்ற வகலவியாலழித
லேற்றவுரையாலழித்தல் சொல்லுதவாதழித
    லென்றுவமை படாதழித விழிசொல்லா வழிதன்
மாற்றியமானத்தினலழிதவிந்த
    வகைபதினென்றுந்தனக்கு மாற்றாற்கு மாகு
மாற்றமிருபத்திரண்டாமவைபோலிவகைக
    ளறுபத்லதந்தாம்விரிக்கிலனேகமுளவாமே. (கஎ)

அளவை முற்றும்.

வத்து நிச்சயம்.

கருதபுற நூலாறின் விரிவுபதி னெட்டுங்
    காவிலுடை சமயத்தி னிரைகள் பதினெட்டு
மிருதெரிவுங்கூட்டியொர் நாற்பத்தெட்டு
    மென்னூலே மெய்ந்நூலென் றிசைக்குமிதற் கெல்லா
மரிதுபொருளாயனுகா தகச்சமய நேரா
    யப்பாலாய்க் கண்ணொளியு மலரிபடிகமும்போற்
பெரிதுபொரு ளாஞ்சைவ சித்தாந்த நெறியைப்
    பேதைமையா லறிந்தவகை காதலின லுரைப்பாம். (கஅ)

End:

பன்னிரண்டாஞ் சூத்திரம்.

அப்படி நிலையி னில்லா தரியவா தனைமே விட்டாற்
கைப்புறு மலங்க டீர்க்குங் கடவுளுக் கடிமை யானோர்
தப்பிலா வடிவிற் சேர்வு சங்கரன் கோயிறன்னை
யப்பொரு ளாகக் காணு நிலையுமன் னிலைய தாமே. (௩௱௩௨)

என்னிலை நின்ற னேனு மிறைநிலை நின்ற னேனுஞ்
சின்னிலை யாசான் மேனி தெரிநிலை தானென் றுய

வன்னிலே யானந் தத்தி லமர்நிலே யான தேசெய்
தின்னிலே நீங்கா திட்டை நிலேயென நிகழ்த்து மாறே. (௩௱௩௰௭)

கேட்டிடுஞ் செவியு மாசா ஞமமே கெடாது காணு
நாட்டமு மாசான் மேனி நாட்டமே நன்றிவ் வாக்கிற்
கோட்டிடு முரையு மாசான் றுதிகளே குணத்துள் மெய்யிற்
பூட்டுறு தொழிலு மாசான் வழிசெயப் புகழா மன்றே. (௩௱௩௰௮)

ஞானத்தில் ஞானமுற்றும்.

Colophon :

தத்துவப் பிரகாச முற்றும்.

தன்னே யறிவிக்குந் தற்போத மாற்றுவிக்கு
மன்னவரு ளானந்த மாக்குவித்கு - மன்னியசீர்த்
தத்துவப்பிரகாச னியற் சண்டையர்கோன் ருனுலாத்த
தத்துவப்பிர காசநூ ருன். (௧)

(* * * *)

எதுசமய மேதுநெறி யேதுநூ லென்று
திதமுற வெண்ணித் தெளியமாட் - டதிகமாப்
புத்திக் கிலேசப் படவேண்டாம் போதிக்குந்
தத்துவப்பிர காசநூ ருன். (௩)

பார்க்கப்போ முன்னூல் படிக்கப்போம் பிராரத்த
மார்த்துணரச் சேராதா காமியஞ் - சேர்த்தபுகழ்த்
தத்துவப் பிரகாச னியற் சண்பையர்கோன் ருனுரைத்த
தத்துவப் பிரகாசந் தான்.

The scribe adds :

௬௱௫௰௨-ஹூ ஆவணிமீ ௰௨ சோமவாரம் உத்தராட நட்சத்திரத்திற் பொன்னப்பன் எழுதி முகிந்த தத்துவப் பிரகாச சாத்திர நூல்.

(கு-பு.)—

இது, சைவசித்தாந்த சாத்திரமாகிய சிவஞான போதத்தின் வழியே பதி பசு பாச இயல்புகளேயும், சரியை கிரியை யோக ஞான முதலியவற்றையும் அகச்சமயம் புறச்சமயம் அகப்புறச்சமயம் புறப்புறச்சமய முதலியவற்றை யும் நன்கு விளக்குவது. அச்சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரக் கருத்துக்களே ௩௱௩௮ செய்யுட்களால் விரித்துக்கூறுவது. சீகாழிச் சிற்றம் பல நாடிகளின் சிஷ்யராகிய தத்துவப் பிரகாச ரென்பவர் இந்நூலே இயற் றினரென்று தெரிகிறது. முற்றும் இருக்கிறது.

R. No. 370.

Paper. 11 × 9¾ inches. Foll. 16. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1918–19 from a MS. in the Library.

(*a*) மறவர்சாதிவிளக்கம்.

MAṞAVARŚĀTIVIḶAKKAM.

Foll. 1*a*—11*a*. Fol. 11*b* is left blank.

A short historical sketch giving an account of the Maṛavar tribe living in Ramnad and Śivagaṅga regions. The seven sub-divisions of this class and their habits and customs, etc., are all described herein.

Complete.

Beginning:

இராமநாதபுரம் சீமை, சிவகங்கைச் சீமையில் இருக்கப்பட்ட
மறவர்சாதி சரித்திரம்.

செம்பிநாட்டு மறவரென்றும், கொண்டையங்கோட்(டை) மறவரென்றும், ஆப்பனூர்நாட்டு மறவரென்றும், அகத்தா மறவரென்றும், ஓரூர்நாட்டு மறவரென்றும், உப்புக்கட்டி மறவரென்றும், குறிச்சிக்காட்டு மறவரென்றும் இப்படி மறவரில் ஏழுவகைச்சாதி; இந்த மறவரில் செம்பிநாட்டு மறவர் சிரேட்டம்.

[சேதுபதி] சிவகங்கையுடையாத் தேவர் கமுதியுடையாத் தேவர் ஓரூர் உடையாத் தேவர் பாப்பனம்பந்தலுடையாத்தேவர் இந்நாலு பேரும் சேதுபதிக்குப் பந்துக்களாகவும் மாமன் மைத்துனனுகவும் சேதுபதிக்குக் கீழ்ப்பட்ட பாளையகாரராகவும் இருக்கப்பட்ட பெயர்.

End:

சிவகங்கைச் சீமையைச்சார்ந்த இந்தச் சாதிமறவர் உடையாத் தேவரிடத்திற் சேவகமும் ராமநாதபுரம் சீமையைச்சார்ந்த இந்த நாட்டு மறவர் சேதுபதியிடத்திற் சேவகமும்; அவர்களுக்கும் அந்தச் சீமையில் ஈட்டிக்காரனுக்கு ஐங்கலவிரைப்பாடு; கத்திக்காரனுக்கு ஐங்கலவிரைப்பாடு; துபாக்கிக்காரனுக்கு, எழுகல விரைப்பாடு (. . . . .) இது ஓரூர் நாட்டாருடைய நடவடிக்கைகள். இந்தச் சேவகத்தின் முறைப்பாடுகள் மற்றச் சாதிமறவரிலே யெல்லாமுண்டு.

Colophon:

மறவருடைய சாதி விளக்கம் சம்பூர்ணம்.

(கு-பு.)—

இது இராமநாதபுரம் சிவகங்கை முதலிய இடங்களிலிருக்கும் மறவரில் உள்ள எழுவகைப்பட்ட பிரிவினர்களுடைய பெயர்களும் அவர்களுடைய ஆசார வியவகாரங்களும், ஆகிய இவைபோல்வனவற்றை விளங்கக்கூறுவது. முற்றும் இருக்கிறது.

(b) கள்ளர்சாதிவிளக்கம்.

KAḶḶARŚĀTIVIḶAKKAM.

Foll. 12*a*—15*b*.

A short history of the Kaḷḷars, giving their sub-divisions, customs, manners, etc.

Incomplete.

At the end of the work a few passages are found written in a page under the heading Tāḍikombu Aḷ akarsvāmitalapurāṇam.

Beginning:

கள்ளர் கலியாணஞ் செய்கிற விவரம்:— தாயோடே பிறந்த மாமன் பிள்ளை முறைப்பெண்ணாவது சிறுபிள்ளையாவது இருந்தால் அந்த முறைப் படிக்குக் கலியாணஞ் செய்யவேணுமேயல்லாமல் பக்கபாரிசத்திற் கலியா ணஞ் செய்யக்கூடாது; தாயோடே பிறந்த மாமனிடத்திற் பெண்ணில்லாத வரையில் ஷெ யானுக்கு ராசியிருந்த இடத்திற் கலியாணஞ்செய்யவேண்டு மேயல்லாது தாய்மாமனுக்கு ராசியான இடத்திற் கலியாணஞ்செய்து வைத் தாற் கலியாணஞ் செய்துகொள்ளவேண்டும்.

End:

மறுபடி பழிதீர்க்கிற தெப்படியென்றால், சாதி சனம் . . . . காரரெல்லாம் கூட்டம்கூட்டி விசாரித்துப் பழிக்கு விவரம்கேட்டு இருபத்து நான்கு பொன் அபராதமும் பழிக்குப்பழி ஒருகாதுக்கு இரண்டுகாது அறுத் துப்போடுகிறது. முதல்காரனுக்கு முதல்வாங்கிக் கொடுத்துவிடுகிறது. இரா. ண்டுபேரும் ராசியாய்ப்போகிறது.

கள்ளர் சாதிவரலாறு குறித்த தென்னவென்றால், காது வளர்த்திருக் கிறது, பெண்டுகள் உள்ளதுபோலே யாதொரு கிளாகணையும் (?) கொடாமல் உள்ள பிரயாசம்போலே ஒன்றுக்கும் குறைவில்லாமல் அகப்பட்டு வந்தத மீதி வந்தது . . . . . .

(கு-பு.) —

இது கள்ளர் என்ற ஜாதியாருடைய ஒழுக்க வழக்கங்களையும், அவர்களுக் குள் உள்ள பிரிவுகளையும் அவர்களுடைய வீரம் முதலியவற்றையும் விளக்கு வது. இந்தப் பிரதியில் இது அபூர்த்தியாயிருக்கிறது. இதன் பின் ஒருபக் கத்தில் 'தாடிக்கொம்பு அழகர்சுவாமி தலபுராணம்' என்ற தலைப்பின் கீழ்ச் சில எழுதப்பட்டுள்ளன.

R. No. 371.

Palm-leaf. 15¼ × 1¼ inches. Foll. 141. Lines, 7 in a page. Telugu. Injured.

Purchased in 1917–18 from M.R.Ry. Prativādibhayaṅkaram Vēṅkaṭācāriyar of Vijayarayi, Kistna district.

அநுஷ்டானரஹஸ்யம்.

ANUṢṬĀNARAHASYAM.

A treatise in Śri-Vaiṣṇavism laying down the conduct of a person desirous of obtaining salvation. The name of the author is not given. A list of some of the topics dealt with in the work is given in the Tamil remarks below.

Incomplete.

Beginning :

ஆசார்யப்ரகரணம்.

சரமசப்தார்த்தம்.

ஸம்ஸாரி சேதனன் தான்தனக்கு மோக்ஷவிச்சையுண்டாம்போது சதாசார்யனை யாச்ரயிக்கவேணும். ஸம்ஸாரி சேதனனானவன் "ஆவாரார்துணை யென் றலைசேர் கடலிலழுந்தும், நாவாய் போல்பிறவிக்கடலுள் நின்று நான் நடுங்க" என்கிறபடியே ஸம்ஸாரஸமுத்திரத்திலே அகப்பட்டு முழுகிக் கொண்டு ஆவிக்கோர் ப[த்து](ற்று)க் கொம்பு இல்லாத சேதனன். எனக்கு இச்சம்சார சாகரத்தினின்றும், என்னையும் தரிப்பிக்கிற மென்கிறபடியே ஸர்வேஶ்வரனுடைய திருவடிகள் ஸ்தானமான ஆசார்யனை நல்லோடமாகப் பண்ணவேணும்.

End :

இந்த உட்பொருளை, பெரிய திருமலைநம்பி எம்பார்க்கு உபதேசித்தார். இராமானுசனும் தன் ஸன்னிதியில் ஸ்ரீ ராமாயணம் சாத்தினபின்பு, அவர்க்குத் தன் திருவடிகளை ஆச்ரயித்த எம்பாரை தாராபூர்வகமாக ஸமர்ப்பிக்க எம்பாரும் பாதிவழிபோய் ஸ்வாசார்யவிஶ்லேஷம்ஸஹியாமையாலே அவரைவிட்டுத் திரும்பி, திருமலைக்குவர அவரைக்குறித்து "பேரொன்[னு](று)ம[த்தி](ற்றி)ல்லை" என்கிறபாட்டில் அர்த்தத்தை அருளிச்செய்து திருவஷ்டாக்ஷரத்துக்கு ஸாரதமார்த்தம் ஸதாசார்ய அபிமானமே ஸர்வாத்மோஜ்ஜீவனத்துக்கு ஸாதனமென்[னு](று) அருளிச்செய்து "ஆக உமக்கு இராமானுசாபிமானமே உத்தாரகம். நமக்கும் நம்முடையார்க்கும் அவரே உத்தாரசர் என்று இருந்தோம். உமக்கு உங்களோடெங்களோடிட்டீடு இல்லை. என்[னு](று) மிங்காசையில்லை. அவர் பாடேபோம்" என்[னு](று) தள்ளி விட்டார். எம்பாரும் அங்காசையிழந்து . . . . எம்பெருமானார் திருவடிகளில் அறுத்தமரம்போலே விழுந்து திருவடி களிரண்டையும் பிடித்துக் கொண்டு அழுது அவரும் இரண்டுகையாலும் . . . .

(கு-பு.)—

இந்நூல் (தெங்கலை) ஸ்ரீவைஷ்ணவமதத்தைச் சார்ந்தது. அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய அனுஷ்டான முறைகளும் ஆசார்யனை வழிபட்டுய்யு முறைகளும் இதில் விவரமாகக் கூறப்பெற்றுள்ளன. பிரதி அபூர்த்தியாயும் சிதிலமாயும் இருக்கிறது. இயற்றியவரின்னாரென விளங்கவில்லை.

இதிலடங்கிய விஷயங்கள் :—

ஆசார்யப்ரகரணம்.	திருப்பாவைக்கு ஸ்வாபதேசம்.
அநுஷ்டானப்ரகரணம்.	திருநக்ஷத்ரகடிகாநிர்ணயம்.
தீர்த்தப்ரஸாதப்ரகரணம்.	காலக்ஷேபப்ரகாரம்.
பைத்ருகப்ரகரணம்.	ஸ்ரீ ராமாயணதாத்பர்யம்.
ப்ரபந்ததிகமனம்.	சிஷ்யாசார்யப்ரணமம்.
தனுர்மாஸப்ரகரணம்.	ஸரஸ்வதீபூஜாநிஷேதம்.

ஹரிவாஸர நிஷேதம் என்பன.

இவை ஏடுகளின் தலைப்பில் ஆங்காங்குக் குறிக்கப்பெற்றிருக்கிறபடியே இங்கே குறிக்கப்பட்டன.

R. No. 372.

Palm-leaf. 17½ × 1¼ inches. Foll. 106. Lines, 6—8 in a page. Tamil and Grantha. Injured.

Purchased in 1918–19 from M.R.Ry. M. Vēdāntācāriyār of Triplicane.

(a) திருமந்திரச்சுருக்கு, வ்யாக்யானத்துடன்.
TIRUMANTIRACCURUKKU WITH COMMENTARY.

Foll. 1*a*—10*b*.

This work forms part of the Dēśikaprabandam and consists of ten stanzas which give briefly the meaning and significance of the Tirumantram or the eight-syllabled prayer formula of the Śrī-Vaiṣṇavas. The author is Vēdāntadēśika. The stanzas are followed by a commentary written by Vākulābharaṇa Vīrarāghava, disciple of Pādukāsēvaka Rāmānujayati.

Complete.

Beginning:

ஸாஹஸ்ரமாராஹ்ய: ஸ்ரீஸதீர்த்யாத்ய மாராசதிந்தா ।
அஷ்டாக்ஷராத்ருத்யஸம்க்ரஹமாயாவிவ்ருணோஸாரவிலீக்ருதே ॥

அநாஜிவ்ருத்நேவத்ருதிபகவிகாமநுவேயக வ்ருமஹேஜாஹோஸம்
வஹாவிநிவகஸ்யாவிவ்ருதயே ।

அஸ்ளநத்வாநாயாஞ்யமாராவிசிதேராக்தவபிகவ்ரவநுவ்யாஸஜ்
த்ருஷ்டிகூரகஸம்ஸ்காரவபிரா ॥ (உ).

மாயாஉரோ:வம்நமெவநதொஷஹெதெயஅ்வ்யெநஷக வி-
ஶோஹஉரோகாவதுழ । வ்யாவ்யாரியாவிவசிவிவ்யவசீக்ஷ்யகோஶாது
ஸஜ்:வ்ரஸீஉககதொமஷிகாதிஶஜ்ஞா: ॥ (ங)

ஸ்ரீதேவ்ரஹஸ்ய டஉவ்யாதிரஹஸ்யத்ரய ஸாரார்ந்தவஹாவ்ரவநுங்களி லே தத்தத் புருஷவிசேஷருச்யனுகுணதாரதமபாவாபன்னஸங்க்ஷேபவிஸ்தாரப்ரக்ரியையாலே ஹேலெநவபஹாவ்ரகார ஸ்ரீமத்லொயவரிஹாராவ்யவ்ரவநு-ஶொஸ்தாரிகஸம்ஹாவிதஸமஸ்த ஶஜ்ஞாவகாஶமான ரஹஸ்யத்ரயத்தினுடைய ஸாரார்த்தங்களை த்ராவிட ஈக்திரஸிகஸாரஜ்ஞஸமாஜ சித்தரஞ்சனமாக த்ராவிடமாயெகளாலே ஸங்க்ரஹிக்க ப்ரவ்ருத்தராய் (. . . . .) "இளக்கமில் மயக்கந்தன்னு வெனக்கு நானுரியே னென்னுங், களக்கருத்தொன்றே கொண்டு கடுநரகடைந்து நின்றீர், விளக்குமிவ்வெழுத்தினாலாம் வேற்றுமை யேற்றிவாங்கித், தளக்கமி லடிமை பூண்டு தூயராய் வாழ்மினீரே"

(இ - ள்) இளக்கமில் - சைதில்யமில்லாத. மயக்கந்தன்னுல் - வ்யாமோ கத்தாலே.

End:

எண்டிசை பரவுஞ் சீரோ ரெங்களுக் கீய்ந்த வெட்டில், உண்டவாறுரைப் பார்போல வொன்பது பொருளுரைத்தோம், பண்டுநான் மறையோர் காக் கும் மாநிதி யிவையனைத்தும், கண்டவர் விள்ளார் விள்ளக் கருதுவார் காண் கிலாரே.

எண்டிசை - எட்டுத்திக்குக்களிலேயும், பரவும் - ப்ரஸரிக்குமவையான, சீரோர் - திருக்கல்யாணகுணங்களையுடைய ஆசார்யர்களாலெ (. . . . .) கண்டவர் - அறிந்தவர்கள், விள்ளார் - பிரகாசிப்பியார்கள்.

லோகத்திலே நிதியைஷித்தால் கோபிக்கு மத்தனை போக்கி ப்ரகடீகரிக்க விரகில்லையிறே.

விள்ளக்கருதுவார் - ப்ரகாசிப்பிக்க நினைக்குமவர்கள், காண்கிலார் - காணமாட்டார்கள் ; மந்த்ரப்ரகாசநப்ரவர்த்தகருக்கு மந்த்ரார்த்தம் நெஞ் சிற்படவே அறுதியிடலாவதென்றபடி.

Colophon:

உத்தம்ஸகலஹாரணோ மஹாமங்கலகருபயா வீரராகவயோகிநஃ |
அஷ்டாக்ஷரார்த்தஸம்க்ரஹமாயா வ்யாவ்ருதிஃ ஸாரபூர்வவிதீர்யதே ||
நாஹம்வெத்தி . . . . . . ஸகதஜ்ஞாஃ ப்ரஸாரணாஸ்து ||
அவ்யூஷி . . . . அஹநி ||

ஸ்ரீமத்பாதுகாஸேவகராமாநுஜஸம்யமிஸார்வபௌமசரண நவ மணிஜெத்யாசீர்ஷ ரவகொரமோநஸஸ்ய ஸ்ரீமத்வைராகரணவீரராகவ- தாசாயச் (. . . . . . .) ஸம்க்ரஹமாயாவ்யாவ்யாநம்- ஸம்பூர்ணம்.

The scribe adds:

ஸ்ரீவத்ஸவம்ஶோத்தாரஸ்ரீஸ்ரீநிவாஸாயச் ஸுத ஸ்ரீஸ்ரீநிவா ஸாயச்செஶிகஸார்வபௌமசரண நதி நக்ஷத்ராணாம்ஃகரண ஸ்ரீ ரங் நாயகாஸஃ உமோஷ்டாக்ஷரஸம் க்ரஹமாயாவ்யாவ்யாலிலகஃ.

(கு-பு.)—

இது வடகலை ஸ்ரீவைஷ்ணவ மதஸம்பந்தமானது. அம்மதப் பெரியார் அஷ்டாக்ஷரத்திற்குக் கொண்ட பொருள் அதன் பெருமை முதலியவற்றை எளிதில் விளக்குவது. வேதாந்த தேசிகரால் இயற்றப்பட்டது. இந்தப்பிரதி யில் முற்றும் உளது.

(b) திருச்சின்னமாலை வ்யாக்யானத்துடன்.
TIRUCCINNAMĀLAI WITH COMMENTARY.

Foll 11a—27b

This poem consisting of 11 stanzas is in praise of God Varadarāja a form of Viṣṇu worshipped in the sacred shrine at Conjeeveram

The meaning and significance of the Aṣṭākṣara, the Dvaya and the Caramaślōka are well brought out in the first nine stanzas. This work forms part of the Dēśikaprabandam, the author of which is as the name implies the well-known Vēdāntadēśika. The Tamil commentary is by Vakulābharaṇa Vīrarāghavadāsa.

Complete.

Beginning:

ஞாநஸூ்ர்யஹமாநஹ்ய: (. . . . . . .) நத்³நா ||
கவிராஜஸிம்ஹ காலமேக நாதாநுவிவ்ருஷீயதாஸ்யஹ்ருத்ஸ்வீரெகெ்ய || (௧).
கநாஜிவ்யதேவ (. . . . .) வடிரோ || (௨).
மாயுாகூரோ: (. . . . . . .) மதிகாதிஸங்கா: || (௩).

ஸத்யவ்ருத க்ஷேத்திரத்திலே ஸ்ரீஹஸ்திகிரி மூர்த்தாவிலே ஆவிர்ப்பவித்தருளின பேரருளாளருடைய அகிலபுவனதிராஜ்ய சின்னபூதமாய் (. . . . . . .) திருச்சின்னமாலையென்று பேரையுடைய ஒரு ப்ரபந்தமாக ஸங்க்ரஹிக்கத் தொடங்கி முற்பட ஆறுபாட்டுக்களாலே மூல மந்த்ரார்த்தத்தை ப்ரதிபாதிக்கக்கோலி யவையிற்றில் ப்ரதமம் மூன்று பாட்டுக்களாலே ப்ரணவார்த்தத்தை வெளியிட நினைத்து (. . . . . .) ஸங்க்ரஹித்தருளுகிறார்.

ஈருலகைப் படைக்கவெண்ணி யிருந்தார் வந்தா
    ரெழின் மலரோன் றன்னையன் றீன்றார்வந்தார்
மாருதமண் ணீராகு மாயோன்வந்தார்
    வானுடனெரி தானாகு மறையோர்வந்தார்
சூரியர்க டம்முடனே துலங்குவார்வந்தார்
    சுராக்டகன் றமுதமருள் சுந்தரனார்வந்தார்
வாரிதிசூழ்வையகத்தை வாழ்வித்தார்வந்தார்
    வண்மையுடன்வரந்தருவார்வந்தார் தாமே.

End:

மறைத்தலையி லிசையெழுத்தில் வணங்கும்வாக்கில்
    மந்திரத்தி னுலெழுத்தாந் திருநாமத்தி
னிறைத்திலகு வேற்றுமையி விரண்டாமொன்றி
    னெடுமாறன் கீதையெல்லா நிறைந்தசொல்லி
லுரைத்தவா கண்டுரைத்தபொருளான வெல்லா
    முயர்விருத வருளாளப் பெருமா டேசின்
றிறத்திலிவை திருச்சின்ன மாலைபத்துஞ்
    செவிக்கினி[ய] தாஞ்சிற்றின்ப மிசையாதார்க்கே.

மறைத்தலையில் - வேத சிரஸ்ஸுக்களிலே, இசை-கீயமானமான, எழுத்தில் - அக்ஷரத்திலே, ஸகலவேதாந்த ப்ரஸித்தமான ப்ரணவத்திலேயும், வணங்கும்வாக்கில் - ப்ரஹ்வீபாவபரமான சப்தத்திலேயும் (. . . . .) திருச்சின்னமாலை - ஆதிராஜ்ய ஸ்ரீசிஹ்னபூத திவ்ய காஹள நிநாதானுகாரரூபதயா திருச்சின்னமாலையென்று பேர்பெற்றிருக்குமவையான, இவை பத்தும் - இந்தப் பத்துப்பாட்டுக்களும், சிற்றின்பம் - அல்பானந்தத்தை, இசையாதார்க்கு - ஸம்மதியாதவர்க்கு, ப்ராக்ருத சப்தாதிவிஷய ரஸாஸ்வாத வித்ருஷ்ணருக்கென்றபடி, செவிக்கு - ஸ்ரோத்ரங்களுக்கு, இனிதாம் - போக்யங்களாம். (௧௧)

Colophon :

உதூ௦வக ு (. . . . .) கயிராஜவிஷ்ணுகாஹஜ நாதா
நூ்வரிஷுதாஸ்ஹுஜவீரதேகே ||
நாஹ௦ (. . . . .) ஶரணாஸு ||

இதி ஸ்ரீமத் வாதிகேஸரிஸேவக ஶாடிகாஜஸ௦யதீ (. . . . . .)
வீரராகவதாஸாயஸ்ய க்ருதிஷு ஸ்ரீ விஷ்ணோர்நாமமாலாவ்யாக்யாந௦
ஸ௦பூர்ண௦.

The scribe adds :

ஸ்ரீரங்கநாயகஸ௦யதிஸாவ்ஹௌமௌவரணநலிநயுலவத்கஸ்ரீஸ்ரீநி
வாஸாயதேஶிகஸாவஹௌமவரணாரவிந்தேகஜீவந ஸ்ரீரங்கநாய
தாஸ: ஸ்ரீவிஷ்ணோர்நாமமாலாவ்யாக்யாமிவத்.

(த-பு.)—

இது காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பேருளாளருடைய விஷய மானது. மூலமந்திரார்த்த முதலியவற்றை எளிதில் தெரிந்துய்யும்பொருட்டுச் செய்யப்பட்டதென்பர். ஸ்ரீநிகமாந்த தேசிகன் இயற்றியது. முற்றும் இருக்கிறது. இந்த வியாக்யானம் ஸ்ரீவீரராகவாசாரியர் என்பவராற் செய்யப்பட்டது.

(c) பன்னிருநாமப்பாட்டு, வ்யாக்யானத்துடன்.

PANNIRUNĀMAPPĀṬṬU WITH COMMENTARY.

Foll. 28*a*—39*b*. Foll. 40 and 41 are left blank.

A poem containing 13 stanzas by Vēdāntadēśika in the first twelve of which the 12 names of God Viṣṇu are eulogised. The work forms part of the Dēśikaprabandam. A commentary by Vīrarāghavadāsa is added.

Complete.

Beginning :

ஶ்ரீஹ்ஸ்மாராஹ்: (. . . . .) நஜூ:|| ஸ்ரீவிஷ்ணோ-
ர்நாமநாமாவலீ(நூரா) மாயாவிவரணீயதாஸ்ஹு வீர தே ஸ்து || (க).
கநாஜிவ்யநேவ . . . . வடிமோ || (உ).
மாயாஉமோ: . . . . மஹிதாதிஶஜ்ஞா: ||

ஸ்ரீமத் ஸச்சரித்ர ரக்ஷா த்விதீயாதி காரத்திலே தம்மாலே ஸாமாந்ய த: த்ரைவர்ணிகருக்கும் விசிஷ்ட ஸ்ரீவைஷ்ணவ ஸார்வவர்ணிகருக்கும் கர்மாங்கத்வ தத்பல பூமாதாயகத்வ பகவத் தாஸ்ய சிந்ஹத்வாதிநாவச்யதார்யத்வேந நிர்ணீதங்களாய் ப்ரபஞ்சேன (. . . . .)

இத்யாதி ப்ரமாணப்ரதிபன்னங்களானப்ரதமபுண்ட்ரதேவதையுடைய வர்ணா யுதாதி விசேஷங்களையருளிச் செய்கிறார் :—

கேசவனாய்நின்று கீழைத்திசையிலு நெற்றியிலுந்
தேசுடையாழிக ளொன்குடன் செம்பசும் பொன்மலைபோல்
வாசமிகுத் தென்னை மங்காமற் காக்கு மறையதனு
லாசை மிகுத்த வயன்மக வேதியி லற்புதனே.

ஆசை—ஆசையாலே, மிகுத்த—அதிசயிதனான, பகவத் விஷயக நிரதிசய ப்ரேமசாலியான வென்றபடி (. . . . .) "நாமகதனந்து நமோந்ததத்தன்னுமரூப மந்த்ரோபதேசார்த்தம் தத்தநநாமஞ்ச ப்ரதிபாத்யகுணவிசேஷ த்யாநவிதாநார்த்தந்து" இப்படிமேலுங் கண்டுகொள்வது. (க)

End:

கற்றுத் திரியுங் கலைகளை வெல்லுங் கருத்தில்வைத்துப்
ப[ற்றி](த்தி)க் குறுதுணையாம் பன்னிரு நாமம் பயில்பவர்க்கு
முத்திக்கு மூல மெனவே மொழிந்த விம்மூந்நான்குந்
தித்திக்கு மெங்கடிருவத்தி யூரரைச் சேர்பவர்க்கே.

பத்திக்கு—பக்திக்கு, உறு—ஸந்நிஹிதமான, துணையாம்—ஸஹாயமான, பகவத் பக்தி வாத்தகமாகவும் (. . . . .) மூலமென—மூலமென்று, மொழிந்த—சொல்லப்பட்டதான, இம்மூந்நான்கும்—இந்தப் பன்னிரண்டு காதைகளும், சித்திக்கும்—ஸித்திக்கும் ; பலித்து விடுமென்றபடி. "தித்திக்கும்" என்று பாடமானபோது அம்ருதம் போலே போக்யதமங்களாமென்று பொருள். (கஉ)

Colophon;

உக்தம் (. . . . . . .) டாஸ: | ஸம்பூர்ணாயுஷே தேவதாநாம் மாயாவ்யவஷிஷ்டஸம்பூர்ணாயுராஸ்வீரசைத்ய ||

நாஹம்ஸேவ (. . . . . .) ஶரணாஸ்து ||

இதி ஸ்ரீமத்வாதிகாரகேஸரிகவிதார்கிகஸிம்ஹஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ரீமத்வேங்கடநாதவிரசிதம் த்வாதசநாமபஞ்ஜரஸ்தோத்ரம் ஸம்பூர்ணம் ||

(கு-பு.)—

இது, திருமாலுக்குரிய பன்னிரண்டு திருநாமங்களை ஒவ்வொரு பாட்டில் ஒவ்வொரு நாமமாக அமைத்துப்புகழ்ந்து கூறுவது. இதை இயற்றியவர் நிகமாந்த தேசிகன். இந்தப் பிரதியில் இது முற்றும் இருக்கிறது.

(d) ஸ்ரீவைஷ்ணவதினசரி வியாக்யானத்துடன்.

ŚRĪ-VAIṢṆAVADINACARI WITH COMMENTARY.

Foll. 42a—57a.

A poem in ten stanzas describing the way in which a true Śrī-Vaiṣṇava should spend his time daily. In the last stanza the author

Vēdāntadēsika eulogises God Varadarāja of Conjeeveram as the Supreme Brahman. This work forms part of the Dēsikaprabandam. A commentary by Vīrarāghavadāsa is added.

Complete.

Beginning :

ஶ்ராஹ்யஸ்ஸம்ஸாராஹ்ய: . . . . நத்வா | ஸ்ரீவைஷ்ணவதி-
னசர்யாமாயாவிஷ்ருஷ்ய வைஷ்ணவவீரவைகே ||
ஸநாஜிஷ்ரவண . . . . . . ஊர்த்வபுண்ட்ரகஸம்ஸ்காரபூர்வகம் |
மாயாஜைர் . . . . . . மஹீதாகிஸந்நா: |

சாந்தோக்யத்திலே பூமவித்யாப்ராகரணத்திலே நாரதமஹரிஷியாலே ஸ்வாதீத வித்யாமயத்திலே பரிகணிதையாய் (. . . .) ஸ்ரீபாஞ்சகாலிகாச்சித்ர வைஷ்ணவதின சர்யையை ஸர்வபுத்தியாரோஹார்த்தமாக த்ரமிட காதைகளிலே ஸங்க்ரஹேணப்ரதர்சிப்பிக்க நினைத்து முற்பட இரண்டு பாட்டாலே ப்ராஹ்ம முகூர்த்தோத்தான ப்ரகாரத்தை யருளிச் செய்கிருர் :—

வரியிரு ளழிவதர் மனம்வரு முணர்வொடு
கரிகிரி மருவிய கரியவ ரடியிணை
பரிவொடு பரவுநல் லடியவர் பழவுரை
அரியரி யரியரி யரியரி யரியே.

வரி—ஆவாரகமான, இருள்—அந்தகாரத்தினுடைய, அழிவதர்—நாசத்திலே, பஹிர்வஸ்து ஸ்புரணகந்தரஹிதையான நித்ரையுடைய அவஸான காலத்திலே யென்றபடி ; (. . . . .) ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையிலே தாமேயருளிச் செய்தாரிறே ; இவர்களாலே அப்யஸ்யமான ஹரிசப்தத்துக்கு ப்ராசீனத் வோக்தியாலே அவிச்சின்ன சௌசஸ்நான மந்த்ர ரூபத்வம் ஸூசிதம். (க)

End :

பெருகியநலதிலே பெருமையின் மிகுகையி
லுருகிய நிலேமன மூயர்முகி ழெழுமுடல்
சொருகிய விழிதிகழ் சுடர்மதி புகுமிறை
கருகியவுரு திகழ் கரிகிரி யரியே.

கருகிய—ச்யாமளமான, உரு—ரூபத்தாலே, திகழ் விளங்காநிற்கிற (. . . . .) மனம்—மனஸ்ஸாலேயும், உயர்—உன்னதமான, முகுள்—முகுளங்கள், எழும்—அங்குரிக்கும்படியான, உடல்—சரீரத்தாலும் புளகமுகுளோத்துங்கமான அங்கத்தாலேயு மென்றபடி (. . . . . . .) விக்ரஹரான பேரருளாளரே ஸமாதி ஸுஸ்வாதலாலஸரான அதிகாரிகளுக்கு ஹ்ருதயங்கமரென்று திருவுள்ளம்.

Colophon :

உக்தம் (. . . . . .) தாஸ: | ஸ்ரீவைஷ்ணவதினசர்யா மாயா-
வ்யவஸ்ருஷ்ட வைஷ்ணவவீரவைதே ||

* * * *

இதி ஸ்ரீமத் வாதிஹம்ஸாம்புவாஹராமானுஜஸம்யமிவரானுஜ-சர்ணநவநீதிஜைத்ரஸூநவகோபராமநவஸு ஸ்ரீமத்வேங்கடநாதார்ய-

வீரராகவாசார்யைஃ க்ருதிஷு ஸ்ரீவைஷ்ணவதிநசர்யாயாம் ஆஹார
வ்யவஹாரநம் ஸம்பூர்ணம் ||

The scribe adds :

ஸ்ரீவத்ஸ ஸ்ரீநிவாஸார்யைர்வாரணாத்ரி நகராஹ்ருதாமூலாத் வரதாசார்ய-
சரணாரவிந்த ஸ்ரீரங்கநாயகதாஸஃ ஸ்ரீவைஷ்ணவதிநசர்யாமாயாவ்யா-
வ்யாலேகிவகீ.

(கு-பு.)—

இது தேசிகப்பிரபந்தங்களுள் ஒன்று. வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்கள் தினந்தோறும் செய்யவேண்டுவனவாகிய கைங்கர்யங்கள் முதலியனவும் அனுஷ்டிக்க வேண்டுவனவாகிய கிரியைகள் முதலியனவும் இன்னின்னவென விளங்கக்கூறுவது. இந்தப் பிரதியில் இது முற்றும் இருக்கிறது.

(e) ஶ்ராத்தவிதி:

ŚRĀDDHAVIDHIḤ.

Foll. 58a—64b.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(f) ஆஹாரநியமம்.

ĀHĀRANIYAMAM.

Foll. 65a—71b.

The text is the same as that described with commentary under R. No. 92 of the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2.

Complete.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 92-ஆம் நம்பர் பிரதிபோன்றது ; ஆயினும் இதில் உரையில்லை ; மூலமட்டும் உள்ளது. முற்றும் இருக்கிறது.

(g) ஆஹாரநியமம், உரையுடன்.

ĀHĀRANIYAMAM WITH COMMENTARY.

Foll. 72a—103b.

Same work as that described under R. No. 92 of the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2.

At the end of the work there are three leaves containing some information relevant to this work.

Complete.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 92-ஆம் நம்பர் பிரதி போன்றது. முற்றும் இருக்கிறது. இதன் பின் 3 ஏடுகளில் இது ஸம்பந்தமாகச் சில விஷயங்கள் எழுதப் பெற்றுள்ளன.

R. No. 373.

Palm-leaf. 16 × 1½ inches. Foll. 32. Lines, 8 in a page. Tamil and Grantha.

Presented in 1918-19 by M.R.Ry. S. Kṛṣṇamācāriyar of Triplicane.

(*a*) ஞானஸார வியாக்யானம்.
ÑANASĀRA VIYĀKHYĀNAM.

Foll. 1*a*—23*a*. Fol. 23*b* is left blank.

Same work as that described under R No. 52(*c*) of the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2. By Aruḻāḻaperumāḻemberumānār.

Complete.

(கு-பு.)—

இந்நூல், மூவருடத்திய காட்லாக் 52 (c) நம்பரில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்றும் இருக்கிறது.

(*b*) ப்ரமேயஸார வியாக்யானம்.
PRAMĒYASĀRA VIYĀKHYĀNAM.

Foll. 24*a*—32*b*.

Same work as that described under R. No. 52(*d*) of the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2: by the same author as of the above work.

Complete.

(கு-பு.)—

இந்நூல், மூவருடத்திய காட்லாக் 52 (d) நம்பர் பிரதியில் வந்துளளதே. இந்தப் பிரதியில் முற்றும் இருக்கிறது.

R. No. 374.

Śrītāla. 16¼ × 1¾ inches. Foll. 104. Lines, 10-11 in a page. Tamil and Grantha. Much injured.

Presented in 1918-19 by M.R.Ry. S. Kṛṣṇamācāriyar of Triplicane.

(*a*) திருச்சந்தவிருத்த வியாக்யானம்.
TIRUCCANDAVIRUTTA VIYĀKHYĀNAM.

Foll 1*a*—82*b*.

Same work as that described under R No. 35 of the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2: by Periyavāccānpiḻḻai.

Complete.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 35-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதிபோன்றதே. முற்றும் இருக்கிறது.

(b) திருப்பல்லாண்டு வியாக்யானம்.

TIRUPPALLĀṆḌU VIYĀKHYĀNAM.

Foll. 83*a*—104*b*.

Same work as that described under R. No. 31 of the Triennial Catalogue of MSS., Vol. I, Part 2 : by Periyavāccānpiḷḷai.

Complete.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 31-ஆம் நம்பரில் வந்துள்ள பிரதிபோன்றது. முற்றும் இருக்கிறது.

R. No. 375.

Palm-leaf. 15 × 1½ inches. Foll. 112. Lines, 8 in a page. Tamil and Grantha. Slightly injured.

Purchased in 1918–19 from M.R.Ry. S. Kṛṣṇamācāriyar of Triplicane.

பெரியதிருமொழி வியாக்யான அரும்பதம்.

PERIYATIRUMOḺI VIYĀKHYĀNA ARUMPADAM.

Short notes on the difficult portions of the well-known commentary of Periyavāccānpiḷḷai on the Periyatirumoḻi.

Contains from the 5th stanza of 5th Tirumoḻi of the 7th Pattu to the 2nd stanza of the 5th Tirumoḻi of the 10th Pattu.

Beginning :

* * * *

அஞ்சாம்பாட்டு :—(பகலுமிரவு மித்யாதி) கீழ்ப்பாட்டில் வடதளசாயியின்படியை அநுஸந்தித்து அஞ்சின இவரை, "நீர் அஞ்சவேண்டாகாணும், எனக்கிதெல்லாம் விபூதிகாணும்" என்ன, அநுஸந்திக்கிறுரென்று ஸங்கதி.

'துன்னி' என்றபதம் (நெருங்கி என்றபடி ; அத்தை) துகில், தேர், புகை இம்மூன்றுக்கும் விசேஷணமாக்கியருளிச்செய்கிறுர்.) நெருங்க வித்யாதி.

மூகிலென்றபதம் வர்ஷாகாலவ்ருக்ஷக மென்றருளிச் செய்கிறுர் ; வர்ஷாகிலென்று.

"எய்க்கை" ஸத்ருசமாகையாயத்தை உபவாதிக்கிறுர் ; அகிலித்யாதி.(ரு)

End:

முதறபாட்டு :—காதிவித்யாதி : " காதிற்கடிப்பை நோவத்திரிக்கிலுன கிங்கிழுக்குற்றெனகாதுகணுந்திடுங்கில்லேன் " என்றத்தைத் திருவுள்ளத் திலே வைத்துக்கொண்டருளுகிருர் பால்யேத்யாதி.

